MAKKAL KURAL (Independent National Tamil Daily) 8 பக்கம் விலை 4.00

# மக்கள் குரல்

SINCE 1973

நடுநிலை நாளேடு

Regd. No. TN/CB/03/2123

கோவை – 17.4.2026 – வெள்ளி ✱ மலர் – 33 ✱ இதழ் – 1

✱ கோவை ✱ நீலகிரி ✱ ஈரோடு ✱ சேலம் ✱ கரூர் ✱ நாமக்கல் ✱ தர்மபுரி ✱ கிருஷ்ணகிரி ✱ திருப்பூர் மாவட்டங்களை இந்த பதிப்பு உள்ளடக்கியது

வெற்றிக்கு வந்தால்! வெற்றி நிச்சயம்!!

## தொடர்ந்து சாதனை படைக்கும்

# வெற்றி ஐ.ஏ.எஸ் ஸ்டடி சர்க்கிள்

## TNPSC குரூப்-1 தேர்வு முடிவுகள் வெளியீடு

சப் கலெக்டர், டி.எஸ்.பி. உட்பட மொத்தம்
78 பணி இடங்களுக்கான தேர்வில் 40க்கும் மேற்பட்ட
வெற்றி ஐ.ஏ.எஸ் மாணாக்கர்கள்



RANK 04 Subathra. K · RANK 05 Arun. V · RANK 07 Larson Israel. N · RANK 10 Sidharth. M · RANK 11 Sergia. L

## வெற்றி பெற்று சாதனை !!!

இதில் தமிழக அளவில்
முதல் 10 இடங்களில் 04 இடங்களை
கைப்பற்றி சாதனை!



RANK 16 Ragavi. G · RANK 20 Suresh Kumar. P · RANK 22 Alagar Raman. S · RANK 23 Priyadharshini. V · RANK 26 Abinaya · RANK 30 Henry Sam Selvyn · RANK 33 Anusha Sweetlin · RANK 34 Arockia Pushparaj · RANK 35 Manoparkavi · RANK 36 Asha Priyadharshini · RANK 39 Ravivarman · RANK 40 Mythili. M · RANK 41 Balamurali. M



RANK 42 keerthika. G · RANK 43 Sahithya. K · RANK 48 Muthuraman. M · RANK 53 Jegadheswaran. R · RANK 56 Gopinath. M · RANK 59 Vidyashree. K · RANK 66 Sabari Krishnan. S · RANK 69 Mayuri. R · RANK 71 Radha Mani · RANK 75 Kavya. M · RANK 76 Radha. R · RANK 77 Selvarani. G S · RANK 78 Priyanka. P



RANK 83 Gopikrishnan. D · RANK 86 Ananthakumar. A · RANK 91 Vijayakumar. P · RANK 93 Ram Prasath. R · RANK 94 C.RANK 15 Preethi. U · RANK 105 C.RANK 16 Jeeva. M · RANK 108 C.RANK 18 Rekash. S · RANK 111 C.RANK 20 Mohana Priya. D · RANK 121 C.RANK 01 Varsha. K · RANK 126 C.RANK 02 Divya. P · RANK 138 C.RANK 04 Sangeeth. P · RANK 139 C.RANK 05 Vasikaran. P · RANK 141 C.RANK 06 Dinesh Kumar. S

VETRII'S NEET - UG TOPPERS



Parvatha Shri K — AIIMS Madurai
Gayathri Priya S — MMC Chennai

## VETRII NEET GATEWAY

Upto 100% Scholarship
(NEET 2026-27)
12th Passed & REPEATERS
Batch Starts on: 13th May '26 (Wednesday)

## TNPSC GR-I,II/IIA PRELIMS CUM MAINS

Batch Starts on: 20th April (Mon) 2026 | 01st May (Fri) 2026

GR-I MAINS | GR-II/IIA MAINS | GR-I,II/IIA Prelims & Mains TS | GR-IV, VAO & SI

# Vetrii IAS Study Circle®

*The Best Academy for IAS & TNPSC Exams*

An ISO 9001 : 2015 Institution | Providing Excellence Since 2011

• CHENNAI • SALEM • KOVAI • MADURAI • TIRUNELVELI • THANJAVUR • KOVILPATTI • TIRUCHENGODE • TRICHY • TIRUVANNAMALAI • KRISHNAGIRI • DHARMAPURI



M. SHUNMUGAM B.E.,
Founder & Chairman

## CHENNAI:
98844 21666
98844 32666

**H.O. CHENNAI-ANNA NAGAR:** F-Block, New No.1, 9th Street, 1st Avenue Avenue Main Road, Anna Nagar (East), Chennai - 600 102.

**SALEM**
95001 22022 / 99436 22022
No. 189/1, Meyanoor Road, Near ARRS Multiplex, Opp. Venkateshwara Complex, Salem – 636 004.

**KOVAI**
93848 48036 / 75021 65390
No. 347, D.S. Complex (3rd Floor), Nehru Street, Ram Nagar, Gandipuram Central Bus Stand (Back Side), Kovai – 641 009.

**MADURAI**
91500 21998 / 91500 21999
No. 199, Dharshini Tower, 1st Floor, Vaigai Colony, Anna Nagar, Madurai – 625 020.

**THANJAVUR**
78711 69099 / 78711 69003
Muthu Complex, Pantaloons Showroom Basement, No. 243, Cauvery Nagar, Opp. New Housing Unit, Thanjavur – 613 005.

**TIRUNELVELI**
91500 10079 / 95006 16279
58, IVY Towers, 3rd Floor, Near to Palai Bus Stand, (Next to Muthamil Hospital), Palayamkottai, Tirunelveli - 627 002.

**KOVILPATTI**
90037 90335 / 81222 80685
Sowbakya Towers, 2nd Floor, No. 4, Santhai Pettai Street, Near Old Bus Stand Road, Kovilpatti – 628 501.

**TRICHY**
95002 78085 / 95002 78086
No. 48, Karur Bypass Road, Melachinthamani, Chathiram Bus Stand Opp., Trichy - 620 002.

**TIRUVANNAMALAI**
98840 43666 / 72008 68248
MSTS Building, Vettavalam Main Road, (Near Vijaya Mall) Tiruvannamalai – 606 601.

**KRISHNAGIRI**
98849 41666 / 98844 32666
No.7 D, Annasalai, Near New Bus Stand, Next to Anna Arch, Londenpet, Krishnagiri - 635 001.

**DHARMAPURI**
84898 22022 / 70929 22022
K.S. Towers, Near Kamalam Hospital, Nethaji Bypass, Road, Dharmapuri - 636701.

—— விரைவில் திருப்பூரில் ——



# தொகுதி மறுசீரமைப்பில் ஸ்டாலின் முகத்தில் கரி பூசிவிட்டது பா.ஜ.க: எடப்பாடி பழனிசாமி தாக்கு

பல்லடம், ஏப்.17–

**தொகுதி மறுவரையறையில் ஸ்டாலின் முகத்தில் பா.ஜ.க. கரி பூசிவிட்டது என்று எடப்பாடி பழனிசாமி கூறினார்.**

**இப்போது கருப்புச் சட்டை ஏன்? மே 4–ந் தேதிக்குப் பிறகு கருப்பு சட்டை போட்டுக்கொள்ளுங்கள் என்றும் அவர் கூறினார்.**



எடப்பாடி பழனிசாமி பல்லடம் திருப்பூர் சாலையில் பெருந்திரளாகக் கூடியிருந்த மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது:– "திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையில் முன்னாள் அமைச்சர் உடுமலைப்பேடை ராதா கிருஷ்ணன், திருப்பூர் வடக்கு– முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.எம். ஆனந்தன், காங்கேயம் – நடராஜன், பல்லடம் – பரமசிவம், தாராபுரம் – சத்யபாமா ஆகிய 5 பேருக்கும் இரட்டை இலை சின்னத்தில் வாக்களியுங்கள். பாஜக சார்பில் திருப்பூர் தெற்கு தொகுதியில் தங்கராஜ்க்கு தாமரை சின்னத்தில் வாக்களியுங்கள். அ.ம.மு.க. சார்பில் மடத்துக்குளம் தொகுதியில் சி.சண்முகவேலுக்கு குக்கர் சின்னத்தில் வாக்களியுங்கள். 7 பேரும் முத்தான வேட்பாளர்கள், கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருவார்கள், சேவை செய்ய வாய்ப்பைத் தாருங்கள்.

ஸ்டாலின் கருப்புச்சட்டை போட்டிருக்கிறார், மே 4ம் தேதிக்கு பிறகு கருப்புச் சட்டை போட்டுக்கொள்ளுங்கள். இப்போது எதற்கு கருப்புச்சட்டை?

பாராளுமன்றத் தொகுதி மறுவரையறை செய்கிறார்கள். அதற்கு ஸ்டாலின் கருப்புச் சட்டை போட்டார், ஊர் முழுவதும் கருப்புக் கொடி ஏற்றச் சொன்னார். நான் வரும் வழியில் எங்கேயும் கருப்புக் கொடி பார்க்கவில்லை. நான் ஏற்கனவே தெளிவு படுத்தினேன், காலையில் கூட பேசினேன். தமிழ்நாட்டிற்கு விழுக்காடு குறையாது என்று சொல்லிவிட்டார், அதன்பிறகும் வேண்டுமென்றே நேற்று மாலை 7 மணிக்கு நடந்த கூட்டத்தில் கருப்புச் சட்டை போட்டிருக்கிறார். அமித்ஷா பேசியதை வைத்துக்கொண்டு எடப்பாடி சொல்கிறார், அதை தண்ணீரில் தான் எழுதி வைக்க வேண்டும் என்றார். இப்போது நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சர் மீண்டும் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

## ஸ்டாலின் முகத்தில் கரி

தமிழ்நாட்டுக்கு 59 தொகுதிகள் என்று அறிவித்துவிட்டார். ஏற்கனவே 7.18% இருக்கிறது, ஸ்டாலின் குறைந்துவிடும் என்றார். இப்போது 7.23% ஆகியிருக் கிறது. 0.5% கூடியிருக்கிறது. இப்போது சட்டையைக் கழற்ற வேண்டியது தானே. மத்திய அரசு அனைத்து மாநிலங்களுக்கும் சமமாக தொகுதிகளை உயர்த்துகிறது. நமது கோரிக்கை நிறைவேற்றப்பட்டது, ஸ்டாலின் முகத்தில் கரி பூசிவிட்டது பாஜக.

## சிதம்பரம் மீது தாக்கு

இன்னொருத்தர் சிதம்பரம். அமித்ஷா சொன்னதை எடப்பாடி பழனிசாமி சொல்கிறார், அதெல்லாம் நடக்குமா என்று கேட்டார். நடந்துவிட்டது. சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டார், எந்த முகத்தை வைத்துக்கொண்டு மக்களைப் பார்ப்பீர்கள். உள்துறை அமைச்சராக, நிதியமைச்சராக இருந்து தமிழகத்துக்கு எதுவும் செய்யாதவருக்கு நம்மை பற்றி பேச தகுதி இருக்கிறதா?

நிதியை அள்ளிக் கொடுத்திருக்க வேண்டாமா..? அதற்கு மனசு வராது. ஓட்டு வாங்கும் வரை பேசுவார்கள், ஓட்டு வாங்கியதும் மறந்துவிடுவார்கள். நீங்கள் மூத்தவர். நாங்கள் பேசினால் நன்றாக இருக்காது. ஸ்டாலினுக்கு வக்காலத்து வாங்கிப் பேசினால் வாங்கிக் கட்டிக்கொள்வீர்கள். நமக்கு ஒன்றும் தெரியாதாம், நாங்கள் சாதித்துவிட்டோம். நாங்கள் வைத்த வேண்டுகோளை நிறைவேற்றினார்கள்.

அவதூறு பரப்பி ஸ்டாலினும், கூட்டணித் தலைவர்களும் அறிக்கை கொடுத்தார்கள். இப்போது அனைத்துக்கும் முட்டுக்கட்டை போட்டாகிவிட்டது. அண்ணா திமுகவை பலவீனமாக நினைக்காதீர்கள், அண்ணா திமுக தொண்டருக்கு இருக்கும் வலிமை கூட முதல்வருக்கு இல்லை.

மங்குனியாக இருக்கிறார். மாலை 6 மணிக்கே உள்துறை அமைச்சர் சொல்லிவிட்டார் என்று 39 எம்.பி.க்களில் ஒருவராவது ஸ்டாலினிடம் தகவல் சொன்னார்களா..? 39 எம்.பி.க்களும் வேஸ்ட் லக்கேஜ், பெஞ்சை தேய்க்கிறார்கள். 39 எம்பிக்கள் இருந்தும் என்ன செய்தீர்கள்..? அதே அண்ணா திமுக காவிரி விவகாரத்தில் பாஜகவுடன் கூட்டணியில் இருந்தபோதும், நாடாளுமன்றத்தில் உச்சநீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டி 22 நாட்கள் ஒத்திவைத்தோம். இது அண்ணா திமுக நிலைப்பாடு, தி.மு.க. ஓட்டு வாங்கும் வரைதான், ஓட்டு வாங்கிவிட்டால் மக்களை மறந்துவிடுவார்கள்.

திருப்பூர் தொழில் நிறைந்த மாவட்டம், கடுமையான மின்வெட்டு, நிலைக்கட்டணம், வீடுகளுக்கு முதலில் 52% உயர்த்தினார்கள். ஆண்டுக்கு 5% என மூன்றாண்டுகளில் 15% உயர்த்தி, இப்போது 67% ஆக உள்ளது. கடைக்கு பீக் ஹவர் என்ற பெயரில் டபுள் சார்ஜ் வசூலிக்கிறார்கள். வீட்டுவரி 100% உயர்ந்துவிட்டது, ஆண்டுக்கு 6% உயர்வு என்று இரண்டு வருடத்தில் 12% ஏற்றிவிட்டனர். கடைக்கு வரி 150% உயர்ந்துவிட்டது, கடைக்கும் ஆண்டுக்கு 6% உயர்வு. போதாக்குறைக்கு குப்பைக்கும் வரி போட்டுவிட்டனர்.

எப்போது பார்த்தாலும் முதல்வருக்கு மகன் பற்றியும் வசூல் பற்றியும் தான் சிந்தனை. இப்படிப்பட்ட முதல்வர் தேவையா? வீட்டு மக்களுக்காக ஆட்சி நடத்துகிறார், தனக்குப் பின் உதயநிதி வரவேண்டும் என்று எண்ணுகிறார், நடக்குமா? எப்போதும் போட்டோ ஷூட், பேர் வைப்பார். அவ்வளவுதான். எத்தனை பேர் வச்சிருக்கார்..? 52 குழு போட்டிருக்கிறர், அந்த குழு என்ன செய்தது என்று வெள்ளை அறிக்கை கேட்டேன் பேசவில்லை.

## பச்சைப் பொய்

இது தொழில் நிறைந்த பகுதி. திமுக ஆட்சியில் தொழில் முதலீடு 1179 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், 15 லட்சத்து கோடி முதலீடு ஈர்க்கப்பட்டது, என்று பச்சை பொய் சொல்கிறார், இதனால் 35 லட்சம் பேருக்கு வேலை கிடைத்ததாம், 77% ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டதாகச் சொல்கிறார். இந்த ஆட்சியில் இருக்குற வேலையை காப்பாற்றினாலே போதும் என்பதுதான் நிலை.

இவர் வந்ததும் தான் தொழில் வளம் பெருகியதாம். ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்ட பின் நிலத்தை எடுக்க வேண்டும். நிலத்தை தொழிற்சாலை வாங்கிய பின் மாநில அரசு, மத்திய அரசிடம் அனுமதி வாங்க வேண்டும், நிதி ஆதாரத்தை பெருக்க வேண்டும். முழுதாகப் பணம் வைத்துக்கொண்டு யாரும் தொழிற்சாலை அமைப்பதில்லை, வங்கியை நாடி கடன் பெற வேண்டும், அதன்பின் கட்டிடம் கட்ட வேண்டும், அப்புறம் தான் தொழிற்சாலை பயன்பாட்டுக்கு வரும். இதற்கு நான்காண்டுகள் பிடிக்கும், இது ஸ்டாலினுக்குத் தெரியும். வேண்டுமென்றே திட்டமிட்டு அவதூறு பரப்புகிறார். ஒப்பந்தம் போட்டதும் தொழிற்சாலை வந்துவிட்டதா? இரட்டை இலக்கம் வளர்ச்சி என்று எல்லா பத்திரிகையிலும் விளம்பரம். முதன்மை துறை விவசாயம், அதில் வெறும் 3.5% தான் வளர்ச்சி, இதே அதிமுக ஆட்சியில் 5.5% வளர்ச்சி. திமுக ஆட்சியில் நான்காண்டுகள் சொல்லாமல் இப்போது தான் இரட்டை இலக்கம் என்கிறார், இது அண்ணா திமுகவினால் வந்தது.

மாநகராட்சிகளில் பிளான் அப்ரூவல் 100% உயர்த்திவிட்டனர். மணல் கொள்ளை தாராளமாக நடக்கிறது, 10 ரூபாய் ஆள்தான் தலைமை ஏற்று நடத்துகிறார். அரசு ஊழியர்கள், விவசாயிகள், சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள், செவிலியர்கள் என எல்லோரும் போராடுகிறார்கள். எல்லோரும் சேர்த்து ஆப்படிக்கப் போகிறார்கள்.

போன முறை ஏமாந்துவிட்டோம், இனிமேல் ஏமாறுவோமா? போனமுறை 2 லட்சம் ஓட்டில் 43 தொகுதியில் தான் நாம் தோற்றோம் அதை ஜெயித்திருந்தால் ஆட்சியில் இருந்திருப்போம். 150 ஓட்டு, 350, 900, 700, 800 இப்படி 2 லட்சம் வாக்குகளை 43 தொகுதிகளில் இழந்ததால் தான் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிறோம். இந்தமுறை நாம் பிரமாண்ட வெற்றி பெற்று ஆட்சி அமைப்போம்.

இவ்வாறு எடப்பாடி பேசினார்.

# மத்திய அரசின் தொகுதி மறுசீரமைப்பு: சந்திரபாபு நாயுடு ஆதரவு

அமராவதி, ஏப். 17–

**தொகுதி மறுசீரமைப்புத் திட்டத்திற்கு 100 சதவீத ஆதரவைத் தருவதாக ஆந்திரா முதல்வர் சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.**

தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் தொகுதி மறுசீரமைப்பு மசோதாவுக்கு எதிர்ப்புகள் ஏற்பட்டது.

இதற்கிடையே ஆந்திரா முதல்வர் சந்திரபாபு நாயுடு மத்திய அரசின் புதிய மசோதாக்கள் மற்றும் தொகுதி மறுசீரமைப்புத் திட்டத்திற்குத் தனது 100 சதவீத ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் மிக முக்கியமான மூன்று மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மத்திய அரசின் இந்த நகர்வு 'அறிவியல் பூர்வமானது' என்று அவர் பாராட்டியுள்ளார்.

தொகுதி மறுசீரமைப்பை மக்கள் தொகை கணக்கெடுப்போடு இணைக்கக் கூடாது என்பதில் நாயுடு மிகவும் உறுதியாக இருக்கிறார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், "தொகுதி மறுசீரமைப்பை மக்கள் தொகையுடன் இணைக்கக்கூடாது.. இப்போது ஒட்டுமொத்த இடங்கள் இரண்டு மடங்காக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளனர். அவர்கள் திட்டத்திற்கு நான் 100% ஆதரவு தருகிறேன்.. திருப்திகரமான திட்டம் தான்.. இறுதியாகத் தொகுதி மறுசீரமைப்பில் சரியான பார்முலாவை கண்டுபிடித்துவிட்டார்கள் என்றே நம்புகிறேன்" என்றார்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தியதற்காகத் தென் மாநிலங்களின் எம்பி சீட்களைக் குறைப்பது நியாயமற்றது என்று வாதிட்டு வந்த நாயுடு, இப்போது தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் அந்தச் சிக்கல் தீர்க்கப்பட்டாகக் குறிப்பிட்டார். தொகுதிகளின் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்படுவதால், மக்கள் தொகைக்கும் இடங்களுக்கும் இடையிலான தொடர்பு துண்டிக்கப்படுகிறது என்றும், இந்த ஃபார்முலாவில் தான் முழுத் திருப்தி அடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு இதை வைத்து சதி செய்வதாக எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை நிராகரித்த அவர், ஒரு கட்சி மக்களுக்காக வேலை செய்யாவிட்டால் எத்தனை சீட்கள் இருந்தாலும் தோற்றுப்போகும் என்பதே எதார்த்தம் என்று சாடியுள்ளார்.

மக்கள் குரல்

17–04–2026

# போரினால் வரும் விலையேற்றம்!

மேற்கு ஆசியப் பகுதியில் அமெரிக்கா ஈரான் இடையிலான மோதல் தீவிரமடைந்துள்ள சூழலில், அதன் தாக்கம் இந்திய பொருளாதாரத்திலும் மெதுவாக வெளிப்பட ஆரம்பித்துள்ளது. இந்த வார தொடக்கத்தில் வெளியான தரவுகள், விலை நிலைமை குறித்து கவலைக்குரிய சைகைகளைத் தருகின்றன.

மார்ச் மாதத்தில் சில்லறை பணவீக்கம் 3.4% ஆக உயர்ந்துள்ளது. பிப்ரவரியில் இது 3.2% ஆக இருந்தது. உணவுப் பொருட்களின் விலை 3.9% வரை உயர்ந்ததே இதற்குக் காரணம். வீடு, மின்சாரம், எரிவாயு போன்ற துறைகளில் பணவீக்கம் கட்டுக்குள் இருந்தாலும், உணவுப் பொருட்களின் விலை உயர்வு பொதுமக்களின் வாழ்க்கையில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

போரின் விளைவாக கச்சா எண்ணெய் விலை மீண்டும் 100 டாலரை கடந்துள்ளது. உலகளவில் விலை உயர்ந்தாலும், இந்தியாவில் உடனடி தாக்கம் தெரியாததற்குக் காரணம் அரசு மேற்கொள்ளும் கட்டுப்பாடுகள் தான். இருப்பினும், இது நீண்ட காலம் தொடர முடியாதது உண்மை.

எரிபொருள் விலை உயர்வு நேரடியாக மட்டுமல்லாமல், போக்குவரத்து, உற்பத்தி, உணவுப் பொருட்கள் என அனைத்து துறைகளிலும் செலவினங்களை உயர்த்தும். இதனால் "விலை ஏற்றம்" என்பது ஒரு தற்காலிக பிரச்சினை அல்ல, விரைவில் தீவிரமடையும் அபாயமாக மாறலாம்.

அண்மை காலங்களில் ஏற்பட்ட காலநிலை மாற்றங்கள், குறிப்பாக சீசனுக்கு மாறான மழை, பயிர்களுக்கு சேதம் விளைவித்துள்ளது. மேலும், இந்திய வானிலை ஆய்வுத் துறை இந்த ஆண்டு தென் மேற்கு பருவமழை சராசரிக்கு குறைவாக இருக்கும் என எச்சரித்துள்ளது.

இது உணவுப் பொருட்களின் உற்பத்தியை பாதிக்கக்கூடும். இதன் விளைவாக, அடுத்த சில மாதங்களில் காய்கறி, தானியம், பழங்கள் ஆகியவற்றின் விலை அதிகரிக்கும் வாய்ப்பு அதிகம்.

விநியோக மேலாண்மை முக்கியம்:

இந்த வாரம் ரிசர்வ் வங்கி வெளியிட்ட தரவுகள், பணவீக்கம் தற்போது கட்டுப்பாட்டில் இருப்பதாக தோன்றினாலும், வெகு விரைவில் அழுத்தம் அதிகரிக்கலாம் என்பதைக் காட்டுகின்றன. தேவையெனில் வட்டி விகித மாற்றம் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.

ஆனால், இப்போது கவனம் செலுத்தப்பட வேண்டியது "விநியோக மேலாண்மை" தான். பொருட்கள் தட்டுப்பாடு ஏற்படாமல் பாதுகாப்பது மிக முக்கியம். சாதாரணமாக கோடைகாலத்தில் பொருளாதாரச் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் ஐபிஎல் கிரிகெட் விளம்பர வருவாய் கூட இந்த முறை எதிர்பார்த்த அளவிற்கு உருவாக்கவில்லை. விளம்பரங்கள், சுற்றுலா, வணிகச் செயல்பாடுகள் ஆகியவை மந்தமாக உள்ளன.

இதுவே, பொருளாதாரத்தில் ஒரு மந்த நிலை உருவாகி வருவதை எதிராளிக்கிறது. முக்கிய உற்பத்தி மாநிலங்களில் நடைபெறும் தேர்தல்கள் காரணமாக, புதிய முதலீடுகள் மற்றும் திட்டங்கள் தற்காலிகமாக தாமதமாகின்றன. இது பொருளாதாரச் செயல்பாடுகளில் மந்தநிலையை உருவாக்குகிறது.

இன்றைய சூழலில், உலக அரசியல் பதற்றம், எண்ணெய் விலை உயர்வு, விவசாயத்தில் சிக்கல்கள், உள்நாட்டு பொருளாதார மந்தம், இந்த அனைத்தும் சேர்ந்து "விலை ஏற்றம்" என்பது தவிர்க்க முடியாத நிஜமாக மாறுகிறது. மொத்ததில் விலை ஏற்றம் என்ற நிஜத்தை ஏற்க வேண்டிய நேரம் வந்து விட்டது.

அரசு தற்காலிக கட்டுப்பாடுகள் மூலம் பொதுமக்களை பாதுகாத்தாலும், நீண்ட காலத்தில் நிலையான தீர்வு தேவை. உற்பத்தி அதிகரிப்பு, விநியோக சங்கிலி வலுப்படுத்தல், மற்றும் சரியான கொள்கை முடிவுகள் மட்டுமே இந்த சவாலுக்கு பதிலாக இருக்கும்.

போர் தூரத்தில் நடந்தாலும், அதன் தாக்கம் நம் சமையலறையில் உணரப்படுகிறது,

இதுவே இன்றைய பொருளாதாரத்தின் உண்மை.

# கோவை காரமடை நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோவில்!

–:எஸ். தீனதயாளன்:–
deenanviji@yahoo.com

நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோவில் சுமார் 1200 ஆண்டுகள் பழமையானது. கர்நாடக மாநிலம் நஞ்சன்கூடு நஞ்சுண்டேஸ்வரரைத் தங்கள் குலதெய்வமாக வழிபட்ட மக்கள், இங்குக் குடியேறியபோது வீரநஞ்சராயர் என்பவரால் இக்கோவில் கட்டப்பட்டது.

காரமடை நஞ்சுண்டேஸ்வரர் விஷ பயம் தீர்ப்பவராக இருக்கிறார். செந்நிற லிங்கமாக காட்சி தரும் இவரை பிரதோஷத்தன்று தரிசிப்பது சிறப்பு. அமிர்தம் பெற விரும்பிய தேவர்களும், அசுரர்களும்' பாற்கடலைக் கடைந்தனர். அதில் மத்தாக பயன்பட்ட வாசுகி என்னும் பாம்பு விஷத்தை உமிழ்ந்தது. அதனால் ஏற்பட்ட உஷ்ணத்தை தேவர்களால் தாங்க முடியவில்லை. அவர்களுக்காக விஷத்தை திரட்டி விழுங்க முயன்றார் சிவன். அதைக் கண்டு திடுக்கிட்ட பார்வதி கணவரின் கழுத்தைப் பிடித்ததால், விஷம் அப்படியே நின்றது. இதனால் சிவனுக்கு நஞ்சுண்டேஸ்வரர் எனப் பெயர் வந்தது என்பது ஐதீகம்.

இந்த கோயிலில், காலை: 6 மணி முதல் மதியம் 12:30 மணி வரை, மாலை: 4 மணி முதல் இரவு 8:30 மணி வரை பக்தர்கள் தரிசனம் மேற்கொள்ளலாம்.



## தனிச்சிறப்புகள்

அபூர்வ லிங்கத் திருமேனி: இங்குள்ள சிவலிங்கம் பிற தலங்களைப் போலன்றி சற்று பட்டையாகவும், செந்நிறமாகவும் (சென்னீருமாக) காட்சியளிக்கிறது.

இரட்டை ஆவுடையார்: பிரதான ஆவுடையார் தவிர, சன்னதிக்குள் தரையிலேயே செதுக்கப்பட்ட மற்றொரு ஆவுடையார் அமைப்பின் நடுவே சிவலிங்கம் வீற்றிருப்பது மிக அபூர்வம்.

யானைகள் தாங்கும் விமானம்: மதுரை மீனாட்சி அம்மன் கோவிலைப் போலவே, இங்கும் 8 யானைகள் சுவாமி விமானத்தைத் தாங்குவது போல அமைக்கப்பட்டுள்ளது. ஒரு யானைக்குக் கீழே பிரம்மாவும், மற்றொரு யானைக்குக் கீழே லட்சுமி நாராயணரும் உள்ளனர்.

சதுரங்க அமைப்பு: சிவன், அம்மன் (லோகநாயகி), ஆறுமுக வேலவர் சன்னதிகள் சோமாஸ்கந்த அமைப்பில் வரிசையாக அமைந்துள்ளன. வழிபாட்டுச் சிறப்புகள் & தோஷ நிவர்த்தி முக்கிய விழாக்கள் வழிபாட்டு முறைபக்திப் பாடல்

## பிரதோஷ வழிபாடு

பாற்கடலில் எழுந்த விஷத்தை சிவன் பிரதோஷ வேளையில் அருந்தியதால், இங்கு பிரதோஷ பூஜைகள் மிக விசேஷமாக நடத்தப்படுகின்றன.

ராகு கேது தோஷம்: துர்க்கை சன்னதி அருகில் சிவலிங்கத்தை ராகுவும் கேதுவும் வழிபடும் அரிய சிற்பம் உள்ளது. ராகு காலத்தில் துர்க்கையையும் இந்த லிங்கத்தையும் தரிசித்தால் நாக தோஷங்கள் நீங்கும் என்பது நம்பிக்கை.

விஷ பயம் நீங்குதல்: நஞ்சுண்டேஸ்வரர் என்பதால், விஷக்கடியால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் விஷ பயம் உள்ளவர்கள் இங்கு வந்து வழிபடுகின்றனர்.

நவக்கிரகங்கள்: இங்கு நவக்கிரக சன்னதி கிடையாது. அதற்குப் பதிலாக காலபைரவர் மற்றும் சூரியன் உள்ளனர்.

விஜயதசமி அம்பு சேவை: சிவனுக்கு இடதுபுறம் லிங்க வடிவில் ரங்கநாதர் அருள்பாலிக்கிறார். புரட்டாசி விஜயதசமியன்று ரங்கநாதர் சிவனுடன் இணைந்து அம்பு விடும் நிகழ்ச்சிக்கு எழுந்தருள்வார். அன்று ஒருநாள் மட்டுமே இருவரையும் ஒன்றாகத் தரிசிக்க முடியும்.

இதர விழாக்கள்: ஐப்பசி அன்னாபிஷேகம், திருக்கார்த்திகை, மகா சிவராத்திரி மற்றும் மகா பிரதோஷம் ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

சிவன் சன்னதி கோஷ்டத்தில் உள்ள மிகச்சிறிய பாதாள விநாயகரை முதலில் வணங்கிய பின்னரே மற்ற தெய்வங்களை வழிபட வேண்டும் என்பது இத்தலத்தின் மரபு.

**"தான்உறு கூறும் நாளும் அடியாரை வந்து**
**நலியாத வண்ணம் உரை செய்**
**ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள்**
**வானில் அரசு ஆள்வர். ஆணை**
**நமதே!"**

முகவரி: நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோவில், காரமடை, கோவை மாவட்டம் 641 104.

சிறுகதை

# புதிய நம்பிக்கை

ஓட்டேரி செல்வ குமார்

திருவல்லிக்கேணியின் 'இக்ரா புத்தக நிலையம்' அர்ஷத்தின் உயிர்மூச்சு. நூர்ஜஹான் பள்ளி முடிந்து வரும்போது, அங்கேயே அமர்ந்து மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதும், அர்ஷத் அரிய வகை நூல்களைத் தேடி எடுத்துத் தருவதும் அந்த மசூதி தெருவின் அழகான காட்சி. ஆனால், ஒரு கோடைக்காலப் பிற்பகலில் அவர்களின் வாழ்க்கையில் ஒரு பெரிய சோதனை வந்தது.

அவர்கள் கடை இருந்த அந்தப் பழைய கட்டிடத்தின் உரிமையாளர் திடீரென ஒரு அறிவிப்பை வெளியிட்டார். "அடுத்த ஒரு மாதத்தில் இந்தக் கட்டிடம் இடிக்கப்படப் போகிறது. இங்கே ஒரு நவீன வணிக வளாகம் வரப்போகிறது. கடையைக் காலி செய்துவிடுங்கள்''.

அர்ஷத் நிலைகுலைந்து போனான். அந்தச் சிறிய வாடகைக் கடையை நம்பித்தான் அவர்களின் வாழ்வாதாரம் இருந்தது. திருவல்லிக்கேணியில் மலிவான வாடகையில் வேறொரு கடை கிடைப்பது குதிரைக்கொம்பு.

"நூர், இந்த ஒரு மாசத்துல இவ்வளவு புத்தகங்களை எங்கே கொண்டு போவேன்? என் தாத்தா காலத்துல இருந்து இங்கேயே பழகிட்டோம். வேற இடம் தேட என்கிட்ட போதிய பணமும் இல்லையே," என்று அர்ஷத் தளர்ந்து போய் அமர்ந்தான்.

நூர்ஜஹான் அவனைத் தோள்தொட்டுத் தேற்றினாள். "அர்ஷத், ஒரு கதவு அடைச்சா அல்லாஹ் இன்னொரு கதவைத் திறப்பான். நம்மகிட்ட இருக்குறது வெறும் பழைய காகிதங்கள் இல்ல, அறிவுச் சொத்து. அதை அவ்வளவு சீக்கிரம் கைவிட முடியாது," என்றாள் உறுதியுடன்.

அவள் ஒரு யோசனை செய்தாள். இப்போது காலம் மாறிவிட்டது, ஏன் நாம் இன்னும் பழைய முறையிலேயே இருக்க வேண்டும்? அவள் தனது மாணவர்களின் உதவியுடன் ஒரு சிறிய இணையதளத்தையும், சமூக வலைதளப் பக்கத்தையும் உருவாக்கினாள்.

'திருவல்லிக்கேணியின் பொக்கிஷங்கள்' என்ற பெயரில் அர்ஷத்தின் கடையிலுள்ள அரிய வகை உருது மற்றும் தமிழ் நூல்களைப் புகைப்படம் எடுத்துப் தனது முகநூல் மற்றும் இன்ஸ்டாகிராமில் பதிவிட்டாள்.

ஆச்சரியமாக, சில நாட்களிலேயே உலகம் முழுவதிலும் இருந்து ஆர்டர்கள் வரத் தொடங்கின. அமெரிக்காவில் இருக்கும் ஒரு பேராசிரியர், தன்னிடம் இல்லாத ஒரு பழைய வரலாற்று நூலை அர்ஷத்திடம் கேட்டுப் பெற்றார். திருவல்லிக்கேணியின் அந்தச் சிறிய கடையின் மதிப்பு மெல்ல மெல்ல இணையம் வழியாகப் பெருகியது.

ஆனாலும், கடையைக் காலி செய்ய வேண்டிய கடைசி வாரம் வந்தது. கையில் போதிய பணம் சேரவில்லை. அர்ஷத் மனமுடைந்து புத்தகங்களை மூட்டைக் கட்டிக் கொண்டிருந்தான். அப்போது ஒரு பெரிய கார் கடையின் முன்னால் நின்றது.

காரிலிருந்து இறங்கியவர் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒரு பெரிய தொழிலதிபர் ஷேக் முகமது. "அர்ஷத், சின்ன வயசுல காசு இல்லாதப்போ உன் கடையில நின்னுதான் நான் நிறையப் படிச்சேன். இன்னைக்கு இந்த மன்ஷன் இடிக்கப்படுற விஷயம் கேள்விப்பட்டேன்... என் பழைய அலுவலகக் கட்டிடம் ஒன்னு பக்கத்துத் தெருவுல காலியா இருக்கு. அதை நீங்க ஒரு நூலகமாவும், கடையாவும் மாத்திக்கோங்க. வாடகைப் பத்திக் கவலைப்படாதீங்க, என்னோட பங்களிப்பா இருக்கட்டும்," என்றார்.

அர்ஷத்தும் நூர்ஜஹானும் ஒருவரை ஒருவர் மாற்றி மாற்றி பார்த்துக்கொண்டனர்.

நேர்மையாகவும், நம்பிக்கையுடனும் போராடியவர்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாக அது அமைந்தது.

அந்த புதிய இடத்தில் 'இக்ரா புத்தக நிலையம் & நூலகம்' பிரம்மாண்டமாகத் திறக்கப்பட்டது. இப்போது அங்கே புத்தகங்கள் விற்பனைக்கு மட்டுமல்லாமல், ஏழை மாணவர்கள் இலவசமாக வந்து படிப்பதற்கும் வசதி செய்யப்பட்டது.

"பார்த்தீங்களா அர்ஷத், பழைய புத்தகத்தோட அட்டையை மாத்தினா அது புதுப் புத்தகம் ஆகிடும். அதே மாதிரிதான் புதிய நம்பிக்கையுடன் நம்ம வாழ்க்கையும் இனி மாறிக்கொண்டே இருக்கும்" என்று நூர்ஜஹான் சொல்ல, அர்ஷத் சிரித்துக்கொண்டே ஒரு புதுப் புத்தகத்தின் முதல் பக்கத்தைத் திறந்தான் அதில் அவர்கள் வாழ்க்கையை கடந்து செல்வதற்கான புதிய நம்பிக்கை மேலும் உறுதியுடன் காத்திருந்தது.

ENROLLMENT
விளம்பரம் செய்ய
ஸ்கேன் செய்யவும்

MAKKAL KURAL (Independent National Tamil Daily)

# மக்கள் குரல்

Regd. No. TN/CB/03/2123

கோவை – 17.4.2026 – வெள்ளி ✱ மலர் – 33 ✱ இதழ் – 1

பெயர் மாற்றம்
விளம்பரம் செய்ய
ஸ்கேன் செய்யவும்

**தமிழக எம்.பி.க்கள் எண்ணிக்கை 39ல் இருந்து 59 ஆக உயரும்**

# நாடாளுமன்றத்தில் 3 மசோதாக்கள் மீது 2வது நாளாக கடும் விவாதம்: இன்று மாலை வாக்கெடுப்பு

புதுடெல்லி, ஏப். 17–

**தொகுதி மறு வரையறை தொடர்பான 3 மசோதாக்கள் நாடாளுமன்றத்தில் நேற்று தாக் கல் செய்யப் பட் ட நிலையில் 2வது நாளாக இன்றும் கடும் விவாதம் நடைபெற்றது. இன்று மாலை வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.**

கடந்த 2023ம் ஆண்டில் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் நிறைவேற்றப் பட்டது. இதன் படி நாடாளு மன்றம், சட்டப்பேரவைகளில் மகளிருக்கு 33 சதவீத இடங் கள் ஒதுக் கப்பட வேண்டும். மகளிர் இடஒதுக்கீடு சட் டத்தை அமல் படுத்த மக் களவையில் தற்போதுள்ள 543 இடங்களை, 850 ஆக அதி கரிக்க மத்திய அரசு திட் டமிட்டு உள் ளது. இதற்காக நாடாளு மன் றத்தின் சிறப்புக் கூட் டம் நேற்று தொடங்கியது. முதல் நாளில் மகளிர் இடஒதுக்கீடு சட் டத்தை அமல் படுத் துவதற்காக அரசி யல் சாசன திருத்தம் (131வது திருத் தம்) மசோதா 2026, தொகுதி மறுவரையறை மசோதா 2026 ஆகியவற்றை மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் மக்களவை யில் அறிமுகம் செய்தார். இதேபோல யூனியன் பிரதேச சட்டங்கள் (திருத்த ) மசோதா 2026ஐ உள்துறை அமைச்சர் அமித்ஷா மக் களவையில் அறிமுகம் செய்தார்.

### எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு

இந்த 3 மசோதாக்களுக்கும் காங்கிரஸ், சமாஜ்வாதி, திமுக உள்ளிட்ட இண்டியா கூட்டணி கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. இவை தொடர்பாக ஆளும் கூட்டணி, எதிர்க்கட்சிகள் இடையே சுமார் 40 நிமிடங் கள் கடும் வாக்குவாதம் நடைபெற் றது. இதைத் தொடர்ந்து மசோதாக்களை விவாதத்துக்கு ஏற்பதா, வேண்டாமா என்பது குறித்து வாக்கெடுப்பு நடந்தது. மசோதாக் களுக்கு ஆதரவாக 251 பேரும், எதி ராக 185 பேரும் வாக்களித்தனர். பெரும்பான்மை வாக்குகளின் அடிப் படையில் 3 மசோதாக்களும் மக்களவையில் அதிகாரப்பூர்வமாக தாக்கல் செய்யப்பட்டன.

இதைத் தொடர்ந்து 3 மசோதாக் கள் மீதான விவாதம் தொடங்கியது. மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் விவாதத்தை தொடங்கி வைத்தார். அவர் கூறியதாவது:

மகளிருக்கான இடஒதுக்கீட்டை சட்ட மேதை அம்பேத்கர், முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் உள்ளிட்டோர் வலியுறுத்தினர். தற்போது நாடாளு மன்றம், சட்டப் பேரவையில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீட்டை வழங்க ஏதுவாக புதிய மசோதாக்கள் தாக்கல் செய் யப் பட்டு உள்ளன. இதன்மூலம் அனைத்து மாநிலங்களிலும் 50 சதவீத எம்.பி. இடங்கள் அதி கரிக் கப் படும். 2029 மக்களவைத் தேர்தலின்போது பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அமலாகும்.

இவ்வாறு அவர் பேசினார்.

### தமிழகத்தின் எண்ணிக்கை 59 ஆக உயரும்

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறியதாவது:

தமிழகத்தில் தற்போது 39 மக்களவைத் தொகுதிகள் உள்ளன. இந்த எண்ணிக்கை 59 ஆக உயரும். அதே போல, கேரளாவில் 20ல் இருந்து 30 ஆகவும், ஆந்திராவில் 25ல் இருந்து 38 ஆகவும், தெலங்கானாவில் 17ல் இருந்து 26 ஆகவும், கர்நாடகாவில் 28 ல் இருந்து 42 ஆகவும் அதிகரிக்கும். கடந்த ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்ட தொகுதி மறுவரையறை மசோதா போன்றே தற்போதைய மசோதாவும் உள்ளது. எந்த மாற்றமும் செய்யவில்லை. ஒரு புள்ளிகூட கூடுதலாக சேர்க்கப்படவில்லை.

இவ்வாறு அவர் பேசினார்.

ஆளும் பாஜக கூட்டணி சார்பில் மத்திய அமைச்சர் கள் அர்ஜுன் ராம் மேக்வால், அமித் ஷா, பிரதமர் மோடி உள்ளிட்டோர் அடுத்தடுத்து பேசினர். அவர் களுக்கும் எதிர்க் கட்சி எம்.பி.க் களுக்கும் இடையே காரசா ரமான வி வாதம் நடைபெற்றது.

பிரதமர் மோடி பேசுகையில், இன்று ஒட்டுமொத்த நாடும், குறிப்பாக மகளிர் சக்தி நிச்சயமாக நமது முடிவுகளை உற்று நோக்கும். ஆனால் முடிவுகளை விட, நமது நோக்கங்களையே அவர்கள் அதிகம் உற்று நோக்குவார்கள். நான் பொறுப்புடன் கூற விரும்புகிறேன். தொகுதி மறுவரையறை காரணமாக பெரியதோ, சிறியதோ, வடக்கோ, தெற்கோ, கிழக்கோ மேற்கோ எந்த மாநிலத்துக்கும் பாதிப்பு ஏற்படாது.

இந்த முடிவெடுக்கும் செயல்முறை யாருக்கும் அநியாயமாக இருக்காது. நடைமுறையில் உள்ள விகிதாச்சாரம் மாற்றமின்றி அப்படியே இருக்கும். அப்படியே தொடரும். இனிமேலும் நாம் தாமதிக்கக் கூடாது என்பதே தற்போதைய தேவை.

இந்த அவையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். நாம் எந்தவிதமான மாயையிலோ அல்லது ஆணவத்திலோ வாழக்கூடாது. நான் 'நாம்' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறேன், 'நான்', 'நீங்கள்' என்ற அடிப்படையில் பேசவில்லை. நாட்டின் பெண் சக்திக்கு நாம் ஏதோ கொடுக்கிறோம் என்ற மாயையில் நாம் வாழக்கூடாது.

அது அவர்களின் உரிமை. அதை நாம் பல தசாப்தங்களாக தடுத்து வந்தோம், இன்று பாவத்தில் இருந்து விடுபடுவதற்கு நமக்கான வாய்ப்பாக இது அமைந்துள்ளது.

இதில் மோடிக்கு ஏதோ அரசியல் ஆதாயம் இருப்பதாக இங்குள்ள சிலர் கருதுகிறார்கள். அவர்கள் எதிர்த்தால், எனக்கு அரசியல் ஆதாயம் கிடைப்பது இயல்புதான். ஆனால் எதிர்ப்பவர்கள் அதற்கான விலையை நீண்ட காலம் கொடுக்க வேண்டியது இருக்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.

### மூன்றில் 2 பங்கு ஆதரவு தேவை

மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்த 3 மசோதாக்கள் மக்களவையில் தாக்கல் செய்யப் பட்டுள்ளன. இந்த மசோதாக்களை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பங்கு எம் .பி.க் களின் ஆதரவு தேவை. மக் களவையின் மொத்த பலம் 543 ஆகும். இதில் 3 இடங் கள் காலியாக உள் ளன. தற்போது 540 எம் .பி.க் கள் மட்டுமே உள்ளனர். இதில் பாஜக தலைமையிலான ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு 293 எம். பி.க்களின் ஆதரவு உள்ளது. எதிர்க்கட் சிகளிடம் 233 எம்.பி.க்கள் உள்ளனர். மூன்றில் இரண்டு பங்கு ஆதரவின் அடிப்படையில் மக்களவையில் மசோ தாக் களை நிறைவேற்ற 360 எம் .பி.க் களின் ஆதரவு தேவை.

தற்போதைய சூழலில் பாஜக கூட்ட ணிக்கு போதிய பெரும்பான்மை இல் லை. மாநிலங் களவையின் மொத்த பலம் 245. இதில் ஒரு இடம் காலி யாக உள் ளது. அவையில் 244 எம். பி.க்கள் மட்டுமே உள்ளனர்.

இதில் பாஜக தலைமையிலான தே.ஜ. கூட்டணிக்கு 141 எம்.பி.க்கள் உள்ளனர். எதிர்க்கட்சிகளிடம் 83 எம். பி.க்கள் உள்ளனர். மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு என்ற வகையில் மசோ தாக் களை நிறைவேற்ற 163 எம்.பி.க் களின் ஆதரவு தேவை.

மசோதாவை நிறைவேற்றும் அளவுக்கு மாநிலங் களவையிலும் பாஜகவுக்கு பெரும்பான்மை இல்லை.

நாடாளுமன்றத்தில் இன்று 2வது நாளாக கடும் விவாதம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஆளும் கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் மாறி மாறி விமர்ச்சனங்களை முன் வைத்து வருகின்றனர்.

விரிவான விவாதத்துக்குப் பிறகு மசோதாக்கள் மீது இன்று மாலை 4 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.

## குஷ்பு சென்ற ஹெலிகாப்டரில் பறக்கும் படை சோதனை

ஊட்டி, ஏப். 17–

**ஊட்டியில் பாஜக மாநில துணைத் தலைவர் குஷ்பு சென்ற ஹெலிகாப்டரைத் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் சோதனை செய்தனர்.**



தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் வருகின்ற ஏப்ரல் 23 ஆம் தேதி ஒரே கட்டமாக நடைபெறவுள்ள நிலையில், அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிரப் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்த நிலையில், ஊட்டியில் போட்டி யிடும் பாஜக வேட்பாளர் போஜ ராஜனுக்கு ஆதரவாக வாக்கு சேகரித்து பிரசாரம் மேற்கொள்வதற்காக ஹெலிகாப்டர் மூலம் குஷ்பு பயணம் மேற்கொண்டார்.

ஊட்டியில் குஷ்பு பயணித்த ஹெலிகாப்டர் தரையிறங்கியவுடன் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர். சோதனைக்குப் பின்னர், கார் மூலம் அங்கிருந்து புறப்பட்டு பிரசாரம் நடைபெறும் இடத்துக்கு குஷ்பு சென்றார்.

கடந்த வாரம் உதகையில் பிரசாரம் மேற்கொள்வதற்காக சென்ற பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலையின் ஹெலிகாப்டரையும் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் சோதனை செய்தது குறிப்பிடத்தக்கது.

## 33% மகளிர் இடஒதுக்கீடு சட்டம் அமலுக்கு வந்தது: அரசிதழில் வெளியீடு

**2029 நாடாளுமன்ற தேர்தலில் நடைமுறைக்கு கொண்டு வர மத்திய அரசு திட்டம்**

புதுடெல்லி, ஏப். 17–

**மக்களவை மற்றும் மாநில சட்டப் பேரவைகளில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்கும் 106 ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டம் – 2023 அமலுக்கு வந்ததாக மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.**

'நாரி சக்தி வந்தன் அதினியம்' என்று அழைக்கப்படும் மக்களவை மற்றும் மாநில சட்டமன்றங்களில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் சட்டம் கடந்த 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிறைவேற்றப்பட்டு குடியரசு தலைவர் ஒப்புதல் பெற்றது. நேற்று இரவு முதல் இந்த சட்டம் அமலுக்கு வருவதாக மத்திய அரசு அரசிதழ் வெளியிட்டுள்ளது.

சட்டம் நிறைவேற்றப்பட்டு ஏறத்தாழ, 30 மாதங்களுக்கு பிறகு சட்டம் அமலாவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. பழைய சட்டத்தின்படி மக்கள் தொகை கணக்கெடுப்புக்குப் பிறகே (2034 ல்) இடஒதுக்கீடு சாத்தியம் என்றிருந்த நிலையை மாற்றி, 2029 பொதுத்தேர்தலிலேயே 33% இடஒதுக்கீட்டை உறுதி செய்ய அரசு திட்டமிட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் தற்போது தொகுதி மறுவரையறை (Delimitation) மற்றும் இடஒதுக்கீட்டை 2029 லேயே அமல்படுத்துவதற்கான புதிய சட்டத் திருத்த மசோதாக்கள் விவாதிக்கப்பட்டு வரும் சூழலில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்த சட்டத்தை 2029 முதல் நடைமுறைக்கு கொண்டு வர தொகுதி மறுவரையறை மசோதா உள்ளிட்ட 3 சட்டத் திருத்த மசோதாக்கள் நேற்று தொடங்கிய 3 நாள் சிறப்பு பாராளுமன்ற கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்பட்டது.

இதுதொடர்பான விவாதம் நேற்று முதல் நடைபெற்று வரும் சூழலில் இன்று மாலை வாக்கெடுப்பு நடக்கிறது.

ஒரு சட்டத்தைத் திருத்துவது குறித்த ஆலோசனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, அச்சட்டத்தை அமலுக்குக் கொண்டு வருவது நடைமுறை சார்ந்த மற்றும் அரசியல் ரீதியான கேள்விகளை எழுப்புவதாகக் கூறி, எதிர்க்கட்சித் தலைவர்கள் விமர்சித்துள்ளனர். தற்போதைய அரசிதழ் அறிவிப்பின் மூலம், இந்தச் சட்டத்தை அரசு, முறையாக செயல்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ளது.

இருப்பினும், ஒதுக்கப்பட்ட இடங்களை நிர்ணயிக்கும் தொகுதி மறுவரையறைப் பணிகள் நிறைவடைந்த பின்னரே, இச்சட்டத்தை நடைமுறையில் முழுமையாகச் செயல்படுத்த முடியும் என்ற நிலை தொடர்கிறது. ஒரு சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிறகு, அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் ஒரு வழக்கமான சட்ட நடைமுறைதான் இந்த அறிவிப்பு என்று மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.



**கொளுத்தும் வெயிலில் சங்ககிரியில் பிரச்சாரம்**

## 6 மாதத்தில் 6 போலீசார் கொலை; போலீசுக்கே பாதுகாப்பு இல்லை: எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு

**'அண்ணா தி.மு.க. வின்னிங்; நல்லாட்சி கம்மிங்' என உறுதி**

சங்ககிரி, ஏப்.17–

**6 மாதத்தில் 6 போலீசார் கொலை செய்யப் பட்டிருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சியில் போலீசாருக்கே பாதுகாப்பு இல்லை என்று எடப்பாடி பழனிசாமி கூறினார்.**

தமிழகத்தில் தேர்தல் பிரச்சாரம் 21–ந் தேதியுடன் முடிவடைகிறது. பிரச்சாரத்துக்கு இன்னும் 4 நாட்களே உள்ளன. எனவே தேர்தல் களம் கடும் சூடு பிடித்துள்ளது. கொளுத்தும் வெயிலிலும் இடைவிடாது பிரச்சாரம் தொடர்கிறது.

அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் தீவிர பிரச்சாரம் செய்து வருகிறார். கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் தொண்டர்களும், பொதுமக்களும் அவரது பேச்சை கேட்க திரண்டு வருகிறார்கள். தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் சூறாவளி சுற்றுப்பயணத்தில் அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று சங்ககிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குப்பனூரில் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது எடப்பாடி பேசியதாவது:–

இந்த மண்ணில் பூமி அதிரும் அளவிற்கு மக்கள் வெள்ளம் குழுமி இருக்கிறது. எங்கு பார்த்தாலும் மக்கள் வெள்ளம். இதை பார்க்கும்போது, நமது வேட்பாளர்கள் வெற்றி பெற்றுவிட்டார்கள் என்றே தெரிகிறது.

அண்ணா திமுக சார்பில் நமது வேட்பாளராக இங்கு வெற்றிவேல் நிறுத்தப்பட்டுள்ளார். அவருக்கு இரட்டை இலை சின்னத்தில் வாக்களிக்க வேண்டும். கடந்த 2024 நாடாளுமன்ற தேர்தலில் சங்ககிரி தொகுதியில் சுமார் 5000 வாக்குகள் கூடுதலாக பெற்றோம். அப்போது நாம் தனியாக நின்றோம்., இப்போது பாமக, பாஜக, அமமுக, தமாக, ஐஜேகே போன்ற கட்சிகள் இணைந்திருப்பதால் அண்ணா திமுக முழு பலத்தோடு, எதிரிகளை வீழ்த்தும்.

இந்த தேர்தல், தமிழ்நாட்டை சுரண்டிப் பிழைக்கும் குடும்பத்திற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் நடக்கிற தேர்தல். ஒரு குடும்பம் வாழ 8 கோடி மக்களை சுரண்டி பிழைப்பவர்களுக்கு முடிவு கட்டும் தேர்தல். முடிவு கட்டுவீர்களா?

விவசாயிகள், லாரி தொழில் சிறக்க வேண்டும் என்பதற்காக பல திட்டங்களை இங்கு செயல்படுத்தியது அண்ணா திமுக அரசு. தண்ணீர் இருந்தால் தான் விவசாயம் செய்ய முடியும். அதற்காக குடிமராமத்துத் திட்டம் கொண்டு வந்து ஏரி, குளம், குட்டைகளை தூர் வாரினோம். தூர்வாரப்பட்ட மண் விவசாயிகளுக்கு

(6–ம் பக்கம் பார்க்க)

## அமைதிப் பேச்சு வார்த்தை இறுதியானால் ஒப்பந்தத்தில் கையெழுத்திட பாகிஸ்தான் செல்வேன்: டிரம்ப் தகவல்

வாஷிங்டன், ஏப்.17–

**ஈரான் அமைதிப் பேச்சுவார்த்தை இறுதி செய்யப்பட்டால், ஒப்பந்தத்தில் கையெழுத்திட நான் பாகிஸ்தான் செல்வேன் என அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.**

கடந்த பிப்ரவரி 28ம் தேதி ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூட்டாக இணைந்து தாக்குதல் நடத்தின. அதற்கு பதிலடியாக இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள், அமெரிக்காவின் நட்பு நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இந்த சூழலில் கடந்த 8ம் தேதி அமெரிக்காவும், ஈரானும் இரண்டு வார கால இடைக்கால போர் நிறுத்தத்துக்கு சம்மதம் தெரிவித்தன.

இரண்டு தரப்புக்கும் இடையில் பாகிஸ்தான் மத்தியஸ்தம் செய்வதாக தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து ஏப்ரல் 11 அன்று அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்கியது. இதில் அமெரிக்கா தரப்பில் துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் மற்றும் ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் கால்பாப் ஆகியோர் பங்கேற்றனர். இந்த பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது. தொடர்ந்து அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை முடக்கும் நோக்கில் செயல்பட்டன. இதனால் மேற்காசியாவில் மீண்டும் போர் பதற்றம் ஏற்பட்டது.

இன்று நடைபெறும் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. உலகளாவிய கச்சா எண்ணெய் போக்குவரத்திற்குப் பாதையான ஹார்மூஸ் ஜலசந்தியை ஈரான் முழுமையாகத் திறந்துவிட வேண்டும் என்பது அமெரிக்காவின் முக்கிய நிபந்தனை. ஈரான் வசம் உள்ள செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை ஒப்படைக்க வேண்டும் என அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வேன்ஸ் தலைமையிலான குழு வலியுறுத்த உள்ளது.

ஏற்கனவே போர் மற்றும் பொருளாதாரத் தடைகளால் உலக அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்துள்ள நிலையில், இந்தப் பேச்சுவார்த்தை வெற்றியடைந்தால் மட்டுமே போர் நிரந்தரமாகத் தவிர்க்கப்படும். பாகிஸ்தான் தவிர துருக்கி மற்றும் எகிப்து நாடுகளும் இந்தப் பேச்சுவார்த்தையில் மறைமுகமாகப் பங்கேற்கின்றன.

லெபனான் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என ஈரான் பிடிவாதமாக உள்ளதால், பேச்சுவார்த்தையில் சிக்கல் நீடிக்கிறது.

இந்நிலையில் வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்த ட்ரம்ப் கூறியதாவது:–

ஈரான் உடனான அமைதிப் பேச்சுவார்த்தை சுமுகமாக உள்ளது. இதன் முன்னேற்றம் நேர்மறையாக அமைந்துள்ளது. கூடிய விரைவில் இரண்டு தரப்புக்கும் இடையிலும் ஒப்பந்தம் கையெழுத்தாகலாம். பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் அது நடந்தால் நான் செல்லக்கூடும். அங்கு நான் இருக்க வேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள்.

இந்த பேச்சுவார்த்தையில் பாகிஸ்தானின் பணி சிறப்பானது. இந்த பேச்சுவார்த்தை இப்போது சரியான திசையில் உள்ளது. இந்த ஒப்பந்தம் மூலம் கச்சா எண்ணெய் விநியோகம் சீராகும், அதன் விலை குறையும், ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல் போக்குவரத்து இயல்பு நிலைக்குத் திரும்பும். அமெரிக்காவின் நிபந்தனைகளுக்கு ஈரான் சம்மதம் தெரிவித்துள்ளது. அணு குப்பைகளை எங்களிடம் தர ஈரான் ஒப்புக்கொண்டுள்ளது. நாங்கள் ஒப்பந்தத்தை மேற்கொள்ள இருக்கிறோம். அதற்கான நல்ல வாய்ப்பு உருவாகியுள்ளது என்றார்.

ஈரான் மீதான தாக்குதலுக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக அணு ஆயுதம் தயாரிக்க முயல்கிறது என்பதே அமெரிக்காவின் குற்றச்சாட்டாக இருந்த நிலையில், தற்போது யுரேனியத்தை வழங்க ஒப்புக்கொண்டு இருப்பதாக டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுவரை 5 அமெரிக்க அதிபர்கள் மட்டுமே தங்கள் பதவி காலத்தில் பாகிஸ்தான் சென்றுள்ளனர். கடைசியாக கடந்த 2006ல் இஸ்லாமாபாத் நகருக்கு ஜார்ஜ் புஷ் சென்றிருந்தார். அதன் பிறகு பாகிஸ்தானுக்கு எந்தவொரு அமெரிக்க அதிபரும் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மொடக்குறிச்சியில் 19ந்தேதி அமித்ஷா பிரச்சாரம்: நயினார் நாகேந்திரன் தகவல்

ஈரோடு, ஏப். 17–

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி தொகுதியில் நாளை மறுநாள் உள்துறை அமைச்சர் அமித்ஷா பிரச்சாரம் செய்ய உள்ளதாக பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தகவல் தெரிவித்தார்.

தமிழக பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் நயினார் நாகேந்திரன் ஈரோட்டில் நிருபர்களிடம் கூறியதாவது:–

மொடக்குறிச்சி தொகுதியில் ஏப்ரல் 19ந் தேதி மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பிரச்சாரம் செய்ய உள்ளார்.

தமிழ்நாட்டில் கஞ்சா மற்றும் போதைப் பொருள் புழக்கம் அதிகமாக உள்ளது. இதை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்று அனைத்து பெண்களும் விரும்புகின்றனர். பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காக பாராளுமன்றத்தில் 33 சதவீத இடஒதுக்கீடு வழங்க வரை முறை திட்டத்தை மத்திய அரசு ஏற்பாடு செய்து உள்ளது.

தமிழக முதல்வர் எதற்கெடுத்தாலும் மத்திய அரசை குறை கூறி எதிர்த்து வருகிறார். அவர் மோதல் போக்கு இல்லாமல் கடமையாற்ற தவறி விட்டார்.




மாற்றம் ஏற்பட வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர். ஆனால் திமுக மக்களை ஏமாற்றும் வேலையை செய்கிறது. உதயநிதியை முதல் அமைச்சராக ஆக்குவது தான் மு.க.ஸ்டாலினின் எண்ணம். முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு தோல்வி பயம் ஏற்பட்டு விட்டது. இதனால் தான் அவர் சம்பந்தம் இல்லாமல் பேசி வருகிறார். தமிழ்நாட்டில் மக்கள் மாற்றத்தை விரும்புவதால் தேசிய ஜனநாயக கூட்டணி அனைத்து இடங்களிலும் வெற்றி பெற அதிக வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது முன்னாள் எம்பி ராமலிங்கம், டாக்டர் சி.கே.சரஸ்வதி எம்எல்ஏ, தெற்கு மாவட்டத் தலைவர் எஸ்.எம். செந்தில், ஊடக பிரிவு தலைவர் ஸ்ரீதர் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



# திங்களூரில் தோப்பு வெங்கடாச்சலம் வாக்குசேகரிப்பு

ஈரோடு, ஏப். 17–

ஈரோடு மாவட்டம் பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திங்களூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில், திமுக வேட்பாளர் தோப்பு என். டி.வெங்கடாச்சலம் வெள்ளிக்கிழமை தேர்தல் பிரசாரம் மேற்கொண்டு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.

திங்களூர், மடத்துப்பாளையம், நடுப்பாளையம், தோரணவாவி, வெட்டையங்கிணறு, மந்திரிபாளையம், மணியக்காரன்பாளையம், கைவெட்டியூர், பிரப் நகர், நிச்சாம்பாளையம், ஆவரங்காடு உள்ளிட்ட 44 கிராமங்களில் அவர் பிரசாரம் செய்தார். வழியெங்கும் திரண்ட பெண்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றனர். வடக்கு ஒன்றிய செயலாளர் பால் சின்னசாமி அவரை வரவேற்றார்.

பிரசாரத்தின் போது தோப்பு வெங்கடாச்சலம் பேசியதாவது:

“நான் அமைச்சராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்த காலத்தில் திங்களூர் பகுதியில் அத்திக்கடவு–அவிநாசி திட்டத்தின் கீழ் பல்வேறு குளங்கள் தூர்வாரப்பட்டன. இதன் மூலம் கிடைத்த நிதி கொண்டு சுற்றியுள்ள கோயில்களுக்கு உதவி செய்து குடமுழுக்கு நடைபெற பங்களித்தேன்.

மேலும் திங்களூரை சுற்றியுள்ள தோரணவாவி, மடத்துப்பாளையம், பாப்பம்பாளையம், வெட்டையங்கிணறு, கருக்குப்பாளையம், போலநாயக்கன்பாளையம் உள்ளிட்ட பகுதிகளுக்கு கொடிவேரி திட்டத்தின் மூலம் தடையில்லா குடிநீர் வழங்க ஏற்பாடு செய்தேன். திங்களூரில் புதிய பத்திரப்பதிவு அலுவலகம் கட்டப்பட்டது. ஆரம்ப சுகாதார நிலையம் 33 படுக்கைகள் கொண்ட நவீன மருத்துவமனையாக மேம்படுத்தப்பட்டது.

வெட்டையங்கிணறு பகுதியில் 30 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தொட்டி அமைக்கப்பட்டது. திங்களூர் சந்தைக்கு அருகில் ரூ.1 கோடி மதிப்பில் சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டது. மேலும், நால் ரோட்டில் தனியார் பங்களிப்புடன் சுற்றுச்சாலை (ரவுண்டானா) அமைக்கப்பட்டது,” என்றார்.

இவ்வாறு சாதனைகளை விளக்கி அவர் வாக்குகளை சேகரித்தார்.



நாமக்கல் மாவட்ட தேர்தல் அலுவலரும் கலெக்டருமான துர்காமூர்த்தி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு, திருச்செங்கோடு வட்டம், மானத்தி, சிவபாக்கியம் முதியோர் இல்லத்தில் நடைபெற்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.



ஈரோடு மாவட்டம் பவானிசாகர் சட்டமன்றத் தொகுதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் பி.எல்.சுந்தரம் பவானிசாகர் அய்யன் சாலை பகுதியில் பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். இதில் வட்டார காங்கிரஸ் தலைவர் டி.கே. சுப்பிரமணியம், மாநில காங்கிரஸ் எஸ்சி எஸ்டி பிரிவு செயலாளர் சங்கர், மாவட்ட மீனவர் அணி தலைவர் சந்திரன், தனபால் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# காலநிலை மாற்றம்: ‘அபாய நிலையில்’ அண்டார்டிகா பனி சார் உயிரினங்கள்

ஜெனீவா, ஏப். 17–

உலக இயற்கை பாதுகாப்பு ஒன்றியத்தின் (ஐயுசிஎன்) ‘அபாய நிலையில் உள்ள உயிரினங்களின் சிவப்பு பட்டியல்’ அறிக்கையின் படி, எம்பரர் பெங்குவின் மற்றும் அண்டார்டிக் பர் சீல் ஆகியவை தற்போது ‘அபாய நிலையில்’ உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. காலநிலை மாற்றம் காரணமாக அண்டார்டிக்காவில் கடல் பனிப்பரப்பில் ஏற்படும் மாற்றங்கள் இந்த நிலைக்கு முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது.

இந்த மாற்றங்கள் தொடர்ந்தால், எம்பரர் பெங்குவின் இனத்தின் எண்ணிக்கை 2080களுக்குள் பாதியாகக் குறையும் என கணிக்கப்பட்டுள்ளது. அதேபோல், உணவுக் கிடைப்பில் ஏற்பட்ட குறைவால், அண்டார்டிக் பர் சீல் இனத்தின் எண்ணிக்கை 2000ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 50 சதவீதத்திற்கும் மேலாகக் குறைந்துள்ளது.

ஐயுசிஎன் இயக்குநர் ஜெனரல் டாக்டர் கிரெத்தல் அகிலார் கூறுகையில், “இந்த தகவல்கள் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள உலக நாடுகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தை உணர்த்துகின்றன. அண்டார்டிக்கா பூமியின் ‘உறைந்த காவலன்’ போன்றது. இது காலநிலையை நிலைநிறுத்துவதிலும், தனித்துவமான உயிரினங்களுக்கு பாதுகாப்பான இடமாகவும் செயல்படுகிறது” என்றார்.

எம்பரர் பெங்குவின் இனமானது அபாய நிலைக்கு அருகில் ‘Near Threatened’ நிலையிலிருந்து அபாய நிலைக்கு (Endangered) மாற்றப்பட்டுள்ளது. 2009 முதல் 2018 வரை மட்டுமே சுமார் 10% (20,000க்கும் மேற்பட்ட பெரிய பெங்குவின்கள்) குறைந்துள்ளதாக செயற்கைக்கோள் படங்கள் காட்டுகின்றன.



### பனி உருகினால்...

இந்த இனத்திற்கு கடல் பனிப்பரப்பு மிகவும் அவசியமானது. குறிப்பாக, கரையுடன் இணைந்துள்ள ‘fast ice’ பகுதிகளில் தான் இவை இனப்பெருக்கம் செய்கின்றன. பனி முன்கூட்டியே உருகிவிட்டால், குட்டிகள் நீந்த கற்றுக்கொள்ளும் முன்பே கடலில் விழுந்து உயிரிழக்கும் அபாயம் உள்ளது.

விஞ்ஞானிகள் கூறுகையில், பசுமைக் வீடு வாயுக்கள் குறைக்கப்படாவிட்டால், இந்த இனத்தின் எண்ணிக்கை இந்த நூற்றாண்டில் வேகமாகக் குறையும் என எச்சரிக்கப்படுகிறது.

### அண்டார்டிக் பர் சீல்

அண்டார்டிக் பர் சீல் இனமானது அபாயம் குறைந்த ‘Least Concern’ நிலையிலிருந்து அபாய ‘Endangered’ நிலைக்கு மாறியுள்ளது. 1999ஆம் ஆண்டில் இருந்த 21 லட்சம் எண்ணிக்கையிலிருந்து, 2025ஆம் ஆண்டில் சுமார் 9.4 லட்சமாக பர் சீல் குறைந்துள்ளது.

கடல் வெப்பநிலை உயர்வு மற்றும் பனிப்பரப்பு குறைவு காரணமாக, கிரில் (krill) எனப்படும் சிறிய கடல் உயிரினங்கள் ஆழமான நீருக்கு நகர்கின்றன. இதனால் சீல்களுக்கு உணவு பற்றாக்குறை ஏற்படுகிறது. இதன் விளைவாக குட்டி சீல்களின் உயிர்வாழ்வு குறைந்து, இனப்பெருக்கம் பாதிக்கப்படுகிறது.

### தெற்கு எலிபன்ட் சீல்

தெற்கு எலிபன்ட் சீல் இனமானது தற்போது அபாயத்திற்கு ஆளாகக்கூடிய ‘Vulnerable’ நிலையில் உள்ளது. 2020க்கு பின்னர் உலகளவில் அதிகரித்துள்ள பறவைக் காய்ச்சல், இந்த இனத்தையும் தாக்கியுள்ளது.

சில பகுதிகளில் பிறந்த குட்டிகளில் 90%க்கும் மேற்பட்டவை உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கூட்டமாக வாழும் இந்த உயிரினங்கள் நோய்களுக்கு எளிதில் பாதிக்கப்படுகின்றன.

இந்த அறிக்கைகள், அண்டார்டிக்காவில் வாழும் பனி சார்ந்த உயிரினங்கள் அனைத்தும் ஆபத்தில் இருப்பதை எச்சரிக்கின்றன. காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை கண்காணித்து, தேவையான தரவுகளை சேகரிப்பது அவசர தேவையாக உள்ளது.

விஞ்ஞானிகள் கூறுகையில், “இந்த உயிரினங்களின் குறைவு, உலகளாவிய சூழலியல் அமைப்புகள் வேகமாக பாதிக்கப்படுகின்றன என்பதை காட்டுகிறது. உணவுக் குறைவு, நோய்கள், வாழ்விடம் இழப்பு ஆகியவை இணைந்து அழிவை வேகப்படுத்துகின்றன” என எச்சரித்துள்ளனர்.



# வாக்காளர் விழிப்புணர்வு பேரணி: ராமகிருஷ்ணா பல் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பங்கேற்பு

கோவை, ஏப். 17–

வாக்குரிமையின் முக்கியத்துவத்தை பொதுமக்களிடம் எடுத்துரைக்கும் நோக்கில், ஸ்ரீராமகிருஷ்ணா பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, கோவை மாநகராட்சி சுகாதாரத் துறை மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் இணைந்து வெள்ளிக்கிழமை வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை நடத்தின.

இந்நிகழ்வை கல்லூரி முதல்வர் ஜே.தினகர், எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை நிர்வாகிகள் சி.வி. இராம்குமார், மகேஷ்குமார், மருத்துவ இயக்குநர் எஸ்.ராஜகோபால், மருத்துவ கண்காணிப்பாளர் எஸ். அழகப்பன் மற்றும் மருத்துவ அலுவலர் ஜீவரத்தினம் ஆகியோர் தொடக்கி வைத்தனர்.

பேரணி காலை 9 மணிக்கு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் இருந்து தொடங்கி, நகரின் முக்கிய பகுதிகள் வழியாக வி.ஓ.சி. பூங்கா வரை நடைபெற்றது. இதில் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் பங்கேற்றனர்.

மாணவர்கள் வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பான பலகைகள் ஏந்தி சென்றதுடன், முகஅலங்காரம் மூலம் விழிப்புணர்வு செய்திகளை படைப்பாற்றலுடன் எடுத்துரைத்தனர். மேலும், 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்ய வாக்காளர் உறுதிமொழியும் எடுத்துக்கொண்டனர்.




தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தலை முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலரும் கலெக்டர் மனிஷ் நாரணவரே திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு வட்டம், ஆண்டிபாளையம் படகு இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து படகில் பயணம் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உள்ளார்.




# சாம்சங் சார்பில் தமிழ்நாட்டில் 5,000 இளைஞர்களுக்கு ஏஐ, கோடிங் பயிற்சி

**கோவை, ஏப். 17–**

சாம்சங் தனது சாம்சங் இன்னோவேஷன் கேம்பஸ் (எஸ்ஐசி) திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் 5,000 இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து சான்றிதழ் வழங்கியதாக அறிவித்துள்ளது. இந்த திட்டம் ஏஐ, கோடிங் & புரோகிராமிங், பிக் டேட்டா மற்றும் இன்டர்நெட் ஆப் திங்ஸ் போன்ற அதிக தேவை கொண்ட தொழில்நுட்ப துறைகளில் பயிற்சி வழங்கி, கல்வியிலிருந்து தொழில் வாழ்க்கைக்கு மாணவர்கள் மாற்றமடைய உதவுகிறது.

இந்த 5,000 பயிற்சியாளர்கள் 71% பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தியா முழுவதும் சான்றளிக்கப்பட்ட 20,000 இளைஞர்களில் தமிழ்நாடு மட்டும் சுமார் 25% பங்களிப்பு வழங்குகிறது. சென்னை மற்றும் கோவை உள்ளிட்ட நகரங்களில் உள்ள முன்னணி கல்வி நிறுவனங்களுடன் இணைந்து இந்த பயிற்சி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

"இந்தியாவின் வளர்ச்சிக்கு இளைஞர்களின் திறன் மிக முக்கியம். தொழில்நுட்பம் வேகமாக மாறும் இந்த காலத்தில், எதிர் காலத் தேவைகளுக்கு ஏற்ப திறன்களை உருவாக்குவது அவசியம்," என்று சாம்சங் சவுத் வெஸ்ட் ஏசியாவின் சிஎஸ்ஆர் மற்றும் கார்ப்பரேட் கம்யூனிகேஷன்ஸ் தலைவர் ஷுபம் முகர்ஜி தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில், வாக்குப்பதிவிற்கு பயன்படத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் புகைப்படத்துடன் கூடிய வேட்பாளர்கள் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலரும் கலெக்டருமான தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், கிருஷ்ணகிரி தேர்தல் நடத்தும் அலுவலர் ஷாஜகான் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# கோவை குமரன் மருத்துவமனையில் 12 வயது சிறுவனின் கல்லீரல் 54 வயது நபருக்கு பொருத்தி மருத்துவர்கள் சாதனை

**கோவை, ஏப். 17–**

கோவை குரும்பபாளையத்தில் உள்ள குமரன் மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில், 12 வயது சிறுவனின் கல்லீரலை 54 வயது நபருக்கு வெற்றிகரமாக மாற்று அறுவைச் சிகிச்சை செய்து மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

கல்லீரல் செயலிழப்பின் இறுதி நிலையில் இருந்த 54 வயது நோயாளிக்கு, மூளைச்சாவு அடைந்த 12 வயது சிறுவனிடமிருந்து தானமாக பெறப்பட்ட கல்லீரல் பொருத்தப்பட்டது. ஒரு சிறுவனின் கல்லீரலை முதியவருக்கு பொருத்துவது மருத்துவ ரீதியாக மிகச் சிக்கலான செயலாகும்.



சுமார் 12 மணி நேரம் நீடித்த இந்த அறுவைச் சிகிச்சையை, மருத்துவமனையின் நிபுணர்கள் குழு வெற்றிகரமாக நிறைவு செய்தது. டாக்டர் ஆனந்த் பரதன், டாக்டர் ரமேஷ், டாக்டர் குருசந்தியா ஆகியோர் தலைமையில் கல்லீரல் மற்றும் செரிமான மண்டல நிபுணர்கள், மாற்று அறுவைச் சிகிச்சை நிபுணர்கள், மயக்க மருந்து நிபுணர்கள் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு செவிலியர்கள் இணைந்து இந்த சிகிச்சையை மேற்கொண்டனர்.

அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு நோயாளி நலமடைந்து வீடு திரும்பியுள்ளார்.

இந்த சாதனையை நிகழ்த்திய மருத்துவக் குழுவினரை மருத்துவமனையின் தலைவர் ஹரிபிரசாத் மற்றும் துணைத் தலைவர் கவிதா ஆகியோர் பாராட்டினர். குமரன் மெடிக்கல் சென்டரில் மேற்கொள்ளப்பட்ட மிகக் கடினமான கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சைகளில் இதுவும் ஒன்றாகும்.



# 100% வாக்குப்பதிவை வலியுறுத்தி பல்லடத்தில் விழிப்புணர்வு பேரணி

**பல்லடம், ஏப். 17–**

திருப்பூர் நுகர்வோர் நல முன்னேற்ற சங்கம் சார்பில் 100 சதவீதம் வாக்குப்பதிவு நடைபெற வேண்டும் என்பதை வலியுறுத்தி பல்லடத்தில் இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

இதற்காக திருமண அழைப்பிதழ் வடிவில் தயாரிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. கடைவீதிகள், வணிக நிறுவனங்கள் உள்ளிட்ட பகுதிகளில் பேரணியாக சென்று பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

தமிழகத்தில் நடைபெறும் சட்டமன்றத் தேர்தலில் 100 சதவீதம் வாக்குப்பதிவு உறுதி செய்ய தேர்தல் ஆணையம் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இப்பேரணி நடத்தப்பட்டது.

பல்லடம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து தொடங்கிய பேரணியை, தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலருமான சு. சரவணன் தொடங்கி வைத்தார்.

இதில் வட்டாட்சியர் கோவிந்தசாமி, சங்கத் தலைவர் ஈ.பி.அ. சரவணன், செயலாளர் வெள்ளையப்பன், சட்ட ஆலோசகர் சுப்புராஜு, கே.ஏ.கே. கிருஷ்ணசாமி, துணைத்தலைவர் கணபதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, "என் ஓட்டு என் உரிமை", "விரல் நுனியில் தேசத்தின் தீர்ப்பு", "காசு வாங்காது ஓட்டு போடுவோம்" உள்ளிட்ட விழிப்புணர்வு வாசகங்களுடன் அனைவரும் உறுதிமொழி ஏற்றனர்.



# 1008 அகல் விளக்குகள் ஏற்றி ஈரோடு கொங்கு கலையரங்கில் தேர்தல் விழிப்புணர்வு

**ஈரோடு, ஏப். 17–**

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு, ஈரோடு கொங்கு கலையரங்கில் தேர்தல் விழிப்புணர்வு விழா சிறப்பாக நடைபெற்றது.

கொங்குவேளாளர் இளைஞர் சங்கம், கவிதாலயம் மற்றும் கவிதாலயம் இசைப்பயிற்சி பள்ளி இணைந்து நடத்திய இந்த விழாவில், "ஓட்டு நமது கடமை" என்ற தலைப்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

ஓவிய ஆசிரியை சரிதா வீராச்சாமி தலைமையில் 10க்கும் மேற்பட்ட ஓவியக் கலைஞர்கள் இணைந்து பிரம்மாண்டமான கோலத்தில் 1008 அகல் விளக்குகள் ஏற்றி விழாவை சிறப்பித்தனர்.

மேலும், 100க்கும் மேற்பட்ட பரதநாட்டிய கலைஞர்கள் கலந்து கொண்டு "ஓட்டு நமது கடமை" என்ற கருத்தை மையமாகக் கொண்டு பல்வேறு நடனங்களை நிகழ்த்தினர்.

விழாவில் கலந்து கொண்டவர்களை கவிதாலயம் ராமலிங்கம் வரவேற்றார். கொங்கு கலையரங்கம் தலைவர் எம். ஆர்.எஸ்.எம்.எஸ். சுப்பிரமணியம், செயலாளர் ஹரிராம் சந்துரு, ஈரோடு மாவட்ட மஞ்சள் மண்டி உரிமையாளர்கள் சங்கம் தலைவர் சின்னசாமி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

மேலும், கொங்கு ருக்ரா ஆர். வேலுசாமி, டாக்டர் ஆர்ஏஎன்எம் கலை அறிவியல் கல்லூரி இயக்குனர் பழனியப்பன், அரிமா ஆயில் ரங்கராஜன், காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் ஏ.டி.எஸ்பி ஜெகன்நாதன் ஆகியோர் தலைமை தாங்கினர்.

விழாவில் பேசுகையில், "ஓட்டு நமது உரிமை" என்ற தலைப்பில் அனைவரும் ஈரோடு மாவட்டத்தில் 100% வாக்குப்பதிவு நடைபெற வேண்டும் என வலியுறுத்தினர்.

முடிவில், கவிதாலயம் மகளிர் அணித்தலைவி திருமதி வெண்ணிலா பெரியசாமி நன்றி தெரிவித்தார்.

## தருமபுரியில் பார்வைத்திறன் குறைபாடுடையோருக்கான அரசு சிறப்பு பள்ளியில் சேர்க்கை

**தருமபுரி, ஏப். 17–**

தருமபுரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு பார்வைத்திறன் குறைபாடுடையோருக்கான சிறப்பு பள்ளியில் 2026–2027 கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைபெற்று வருவதாக கலெக்டர் சதீஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியதாவது:

தருமபுரி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கீழ் இலக்கியம்பட்டியில், அரசு காதுகேளாதோருக்கான மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் அரசு பார்வைத்திறன் குறைபாடுடையோருக்கான சிறப்பு பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் பார்வையற்ற மற்றும் குறைபார்வையுடைய மாணவ, மாணவியர்களுக்கு 1 முதல் 5ஆம் வகுப்பு வரை கல்வி வழங்கப்படுகிறது.

மாணவர்களுக்கு சீருடை, உணவு, பாடப்புத்தகங்கள் மற்றும் இலவச விடுதி வசதியுடன் பிரெய்லி முறையில் சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. மேலும், கணினி வழிக் கல்வியும் வழங்கப்படுகிறது.

2026–2027 கல்வியாண்டிற்கான சேர்க்கை நடைபெற்று வரும் நிலையில், 5 முதல் 12 வயதுக்கு உட்பட்ட பார்வையற்ற மற்றும் குறைபார்வையுடைய சிறுவர், சிறுமியர்கள் பாதுகாப்பான சூழலில் தங்கி கல்வி கற்க தேவையான அனைத்து வசதிகளும் தமிழக அரசால் இலவசமாக வழங்கப்படுகின்றன.

மேலும் தகவல்களுக்கு தலைமையாசிரியரை (தொலைபேசி: 9543025483) தொடர்புகொள்ளலாம். பள்ளி முகவரி: அரசு பார்வைத்திறன் குறைபாடுடையோருக்கான தொடக்கப்பள்ளி, இலக்கியம்பட்டி, ராஜாஜி நீச்சல் குளம் அருகில், தருமபுரி – 5. பார்வைத்திறன் குறைபாடுடைய மாணவர்களை இப்பள்ளியில் சேர்த்து பயன்பெறுமாறு பெற்றோர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.



# நீலகிரியில் வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்பெயர், சின்னம்பொருத்தும்பணி தொடங்கியது

**நீலகிரி, ஏப். 17–**

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு, உதகமண்டலம் சட்டமன்ற தொகுதிக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் (ஈவிஎம்) வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணியை, மாவட்ட தேர்தல் அலுவலரும் கலெக்டருமான லட்சுமி பவ்யா தண்ணீரு அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நீலகிரி மாவட்டம் உதகையில் உள்ள பிரிக்ஸ் ஆங்கிலோ இந்தியன் மெமோரியல் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற இந்த பணிகளை அவர் நேரில் கண்காணித்தார்.

இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்தபடி, ஏப்ரல் 23 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு, நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகமண்டலம், கூடலூர், குன்னூர் சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. மேலும், வாக்களிப்பதன் அவசியம் குறித்த பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, உதகமண்டலம் தொகுதிக்கான வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதுபோல், கூடலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கூடலூர் புனித தாமஸ் பள்ளியிலும், குன்னூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குன்னூர் பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரியிலும் இதேபோன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிகழ்வில் உதகை வருவாய் கோட்டாட்சியரும் தேர்தல் நடத்தும் அலுவலருமான டினு அரவிந்த் உள்ளிட்டோர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

swelect
Powering the world responsibly

CIN: L93090TN1994PLC028578
**பதிவு அலுவலகம் :** 'ஸ்வெலக்ட் இல்லம்', எண்.5, சர் P.S. சிவசாமி சாலை, மயிலாப்பூர், சென்னை - 600 004. தொலைபேசி : +91 44 24993266. தொலைநகலி : +91 44 24995179. மின்னஞ்சல் : cg.ird@swelectes.com இணையதளம் : https://swelectes.com

**பொது அறிவிப்பு**
**காகித வடிவிலான பங்கு பத்திரங்கள் பரிமாற்றம் மற்றும் மின்னணு மயமாக்கலுக்கான (Demat) சிறப்பு சாளரம் குறித்து**

ஜனவரி 30, 2026 தேதியிட்ட **இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) சுற்றறிக்கை எண்.HO/38/13/11(2)2026-MIRSD-POD/I/3750/2026**-ன் படி, ஏப்ரல் 01, 2019-க்கு முன்பு செயல்படுத்தப்பட்ட **காகித வடிவிலான பங்குகளை பரிமாற்றம் செய்வதற்கும் மற்றும் Demat (மின்னணு மயமாக்கல்)** செய்வதற்கும் ஓராண்டு கால சிறப்பு சாளரம் திறக்கப்பட்டுள்ளது.

**இந்த சிறப்பு சாளரம் பிப்ரவரி 05, 2026 முதல் பிப்ரவரி 04, 2027 வரை திறந்திருக்கும்.**

மேற்கூறிய சுற்றறிக்கையின்படி, ஏப்ரல் 01, 2019-க்கு முன்னர் செயல்படுத்தப்பட்ட உரிமை மாற்றப் பத்திரங்களைக் கொண்ட முதலீட்டாளர்கள் உட்பட :

- **புதிதாகச் சமர்ப்பிக்கப்படுபவை, மற்றும்**
- **குறைப்பாடுகள் காரணமாக முன்பு நிராகரிக்கப்பட்ட/திருப்பி அனுப்பப்பட்ட/கவனிக்கப்படாத பங்கு பரிமாற்றக் கோரிக்கைகள்.**

ஆகியவை இந்தச் சிறப்பு சாளரத்தின் போது, பங்கு பரிமாற்றம் மற்றும் டிமேட் கோரிக்கைகளாக சமர்ப்பிக்கலாம்.

தகுதியுள்ள முதலீட்டாளர்கள் தங்கள் கோரிக்கைகள் மற்றும் மறு கோரிக்கைகளை, SEBI சுற்றறிக்கையின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட தேவையான ஆவணங்களுடன், நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரான (RTA) M/s.கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்-ல் சமர்ப்பிக்கலாம்.

இவ்வாறு மாற்றப்படும் பத்திரங்கள் பங்கை பெறுபவருக்கு Demat (மின்னணு) வடிவில் மட்டுமே வரவு வைக்கப்படும் மற்றும் SEBI வழிகாட்டுதல்களின்படி, பங்கு பரிமாற்றம் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு 'லாக்-இன்' (lock-in) காலத்திற்கு உட்பட்டதாக இருக்கும்.

பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் (RTA) விவரங்கள் :
**கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட்,** "சுப்பிரமணியன் பில்டிங்", எண்.1, கிளப் ஹவுஸ் சாலை, அண்ணா சாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 044-4002 0700. மின்னஞ்சல் : investor@cameoindia.com; இணையதளம் : https://wisdom.cameoindia.com/

விரிவான வழிகாட்டுதல்கள் நிறுவனத்தின் இணையதளமான **https://swelectes.com**-ல் கிடைக்கும்.

இந்த அறிவிப்பு பங்குதாரர்களின் தகவலுக்காகவும் மற்றும் SEBI விதிமுறைகளுக்கு இணங்கவும் வெளியிடப்படுகிறது.

**ஸ்வெலக்ட் எனர்ஜி சிஸ்டம்ஸ் லிமிடெட்டுக்காக**
ஒப்பம்
**J. புவனேஸ்வரி**
நிறுவன செயலாளர்
உறுப்பினர் எண்.A25193

இடம் : சென்னை
தேதி : 16.04.2026



## மலையுடன் மோதினால் உங்கள் தலை தான் உடையும்

# ‘ஸ்டாலின் கூப்பன் அறிவிப்பால் உயிர் போனது தான் மிச்சம்’: எடப்பாடி பழனிசாமி காட்டம்

## தொகுதி மறுவரையறையில் ஸ்டாலின் அவதூறு பரப்புகிறார்

**மேட்டுப்பாளையம், ஏப்.17– ஸ்டாலின் கூப்பன் அறிவிப்பால் ஒரு பெண்ணின் உயிர் போனது தான் மிச்சம் என்று எடப்பாடி பழனிசாமி கூறினார்.**

எடப்பாடி பழனிசாமி கோவையில் ரோடு ஷோ சென்று மக்களிடையே பிரச்சாரம் மேற்கொண்டார். இதையடுத்து மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோஆபரேடிவ் காலனி, காரமடை சாலையில் திரண்டிருந்த மக்களிடம் சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:–

கவுண்டம்பாளையம் தொகுதியில் பி. ஆர். ஜி. அருண்குமார், மேட்டுப்பாளையம் தொகுதியில் சின்னராஜ், அவிநாசி தொகுதியில் பா.ஜ.க. சார்பில் எல்.முருகன், நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதியில் பொன்.ஜெயசீலன், குன்னூர் தொகுதியில் ராமு, உதகை தொகுதியில் பாஜக வேட்பாளர் போஜராஜன் ஆகியோர் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அண்ணா திமுக வேட்பாளர்களுக்கு இரட்டை இலையிலும், பாஜக வேட்பாளர்களுக்கு தாமரை சின்னத்திலும் வாக்களித்து வெற்றி பெற வையுங்கள். அத்தனை வேட்பாளர்களையும் பல்லாயிரக்கணக்கான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யவேண்டும்.

### பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு

நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு தீர்மானம். இது, நீண்ட காலமாக பெண்கள் வைத்துவரும் கோரிக்கை. அம்மா உள்ளாட்சியில் 33% என்பதை 50% ஆக உயர்த்தினார். நான் எம்பியாக இருந்தபோது 1998ல் நாடாளுமன்றத்தில், சட்டமன்றத்தில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு வேண்டும் என்று மசோதா கொண்டுவந்தார்கள். அம்மா இருந்த காலத்தில் கூட்டணியில் இருந்தோம், வாஜ்பாய் பிரதமராக இருந்தார், சட்டத்துறை அமைச்சராக தம்பிதுரை மசோதாவை படிக்கும்போது முலாயம் சிங் யாதவ் புடுங்கி கிழித்தெறிந்தார். அப்போது நின்றுவிட்டதை, பிரதமர் மோடி இப்போது நிறைவேற்றி இருக்கிறார்.

பாராளுமன்ற தொகுதி வரையறை பற்றி ஸ்டாலின் வேண்டுமென்றே எண்ணிக்கை குறையும் என்று அவதூறு கருத்து சொல்கிறார். வீடு வீடாக கருப்புக் கொடி கட்டச்சொன்னார், எந்த ஒரு கருப்புக் கொடியும் கண்ணுக்குத் தெரியவில்லை. ஏனெனில் அவர் பேசுவது பொய். ஸ்டாலினால் பதில் கருத்து சொல்லமுடியலை.

தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்கும் போட்டி என்கிறார் ஸ்டாலின். இப்போது நடப்பது சட்டமன்றத் தேர்தல். மேட்டுப்பாளையம் மக்களுக்குத் தெரியும் விஷயம் கூட முதல்வருக்குத் தெரியவில்லை. திமுகவை அகற்றும் தேர்தல் இது. இதனால்தான் பாஜகவுடன் கூட்டணி வைத்தோம், மக்கள் விரோத திமுக ஆட்சியை அகற்றும் கூட்டணி. தி.மு.க.வை வீழ்த்துவீர்களா?

தி.மு.க. ஆட்சியின் 5 ஆண்டில் மேட்டுப்பாளையத்துக்கு ஏதாவது செய்தார்களா? இங்கு கட்டிய பாலம் அனைத்தும் நாம் தான் கட்டினோம். ஒரே ஒரு பாலம் தான் அவர் கட்டினார், அதுவும் பாதியில் நிற்கிறது. கோவை மாவட்டத்தில் அதிக பாலங்கள் கட்டினோம். கிராமம் முழுவதும் கூட்டுக்குடிநீர் திட்டம், அத்திக்கடவு அவிநாசி திட்டம் இரண்டாவது திட்டம் விரிவான திட்ட அறிக்கை கொடுத்தோம், ஆனால் ரத்து செய்துவிட்டது தி.மு.க. மீண்டும் அண்ணா தி.மு.க. ஆட்சியில் இரண்டாம் கட்டத் திட்டம் நிறைவேற்றப்படும், நானே வந்து அடிக்கல் நாட்டுவேன்.

கோவை மாவட்டம் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி, விலைவாசி கடும் சவாலாகிவிட்டது.



விண்ணை முட்டும் அளவுக்கு உணவுப்பொருள்களின் விலை உயர்ந்துவிட்டது. விலைவாசியைக் கட்டுப்படுத்த திமுக அரசு முயலவில்லை. ஏழை நடுத்தர மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

### கூப்பனும் தற்கொலையும்

இப்போது கூப்பன் கொடுக்கிறாராம், அதில் ஒரு கமிஷன் வரும். எப்படியும் ஆட்சிக்கு வரப்போவதில்லை. தேர்தல் அறிக்கையில் கூட கருணாநிதி குடும்பத்துக்கு என்ன லாபம் வரும் என்று பார்த்துதான் கூப்பன் வெளியிட்டார்கள். அடுத்த நமது ஆட்சியில் திமுக ஆட்சியின் வரிச்சுமையால் பாதிக்கப்பட்ட மக்களின் துன்பத்தைக் களைய உதவித்தொகை 10 ஆயிரம் ரூபாய் வங்கியில் செலுத்தப்படும். திமுக அவங்க வீட்டு பேங்கில் போடப் பார்க்கிறார்கள் ஒரு பெண் கூப்பன் கேட்டிருக்கிறார், கொடுக்க மறுத்ததால், அந்தம்மா தற்கொலை செய்துகொண்டார், இவர் அறிவிப்பினால் ஒரு உயிர் இழந்தது தான் மிச்சம்.

அண்ணா தி.மு.க. ஆட்சியில், விவசாயிகள் வணிகப்பயிர்களுக்கு காப்பீடு திட்டம் கொண்டுவரப்படும். காற்று வந்தால் வாழை ஒடிந்துவிடுகிறது, நானும் விவசாயி என்பதால் கஷ்டத்தைப் புரிந்ததால் காப்பீடு பிரீமியம் 5% ஆக இருந்தது, அதனை 2% ஆக குறைக்கப்படும். இனி உங்களுக்கு கிடைக்க வேண்டிய பணம் முழுமையாக கிடைக்கும். தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன் 2016ம் ஆண்டு அம்மா முதல்வராக இருந்தபோதும், அடுத்ததாக 2021ம் ஆண்டு நான் முதல்வராக இருந்தபோதும் என ஒரே அதிமுக ஆட்சியில் இரண்டுமுறை பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. மீண்டும் அதிமுக ஆட்சியில் பயிர்க்கடன் ரத்து செய்யப்படும்.

போதைப் பொருள் நடமாட்டம் கடுமையாக இருக்கிறது, அதிமுக ஆட்சி அமைந்த மூன்றே மாதத்தில் கஞ்சா ஒழிக்கப்படும்.

நான் யார் தெரியுமா? முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்கிறார். அப்பா சொன்னதையே செய்கிறேன் என்கிறார். அப்படி என்றால், அவங்க அப்பா சொல்லியதை இவர் செய்ய வேண்டாமா? அப்போது கருணாநிதி என்ன சொன்னார்..? குஜராத்தை நல்ல வகையில் மேம்படுத்திய மோடி மிகவும் நல்லவர் என்று கருணாநிதி சொல்லியிருக்கிறார். அப்பாவே சர்டிஃபிகேட் கொடுத்துவிட்டார், நீங்கள் ஏன் கருப்புக் கொடி காட்டுகிறீர்கள், கருப்பு பலூன் விடுகிறீர்கள்.

### மலையுடன் மோதினால் உங்கள் தலை தான் உடையும்

எதிர்க்கட்சியாக இருக்கும்போது கருப்பு பலூன், ஆளுங்கட்சியாகி விட்டால் வெள்ளைக் குடை பிடிக்கிறார். உங்கள் கேம் அத்தனையும் இவருக்குத் தெரியும், அத்தனை முதல்வரையும் வழிநடத்தக்கூடிய இடத்தில் இருக்கும் மோடியிடம் சவால் விடுகிறார். மலையில் போய் தலை மோதினால் என்னாகும்..? உங்கள் மண்டைதான் உடையும்.

இது நெசவாளர்கள் நிறைந்த பகுதி. நெசவாளர்களுக்கு பசுமை வீடுகளைக் கட்டிக்கொடுத்தோம். கைத்தறி துணிகள் அதிகமாக நெய்யப்பட்டு தேக்கமடைந்தபோது 350 கோடி ரூபாய் மானியம் கொடுக்கப்பட்டது. கைத்தறி நெசவாளர்களுக்கு இப்போது 300 யூனிட் விலையில்லாமல் கொடுக்கிறோம், அது 450 யூனிட்டாக உயர்த்தப்படும், விசைத்தறி நெசவாளர்களுக்கு தற்போது 1000 யூனிட் விலையில்லாமல் கொடுக்கிறோம், அது 1400 யூனிட்டாக உயர்த்தப்படும். 65 வயதுக்கு மேற்பட்ட ஓய்வூதியதாரர்களுக்கு 2500 ரூபாய் வழங்கப்படும்.

### மேட்டுப்பாளையத்தில் 2 பாலம்

ஊட்டியில் இருப்பவர்கள் அறுவை சிகிச்சை செய்வதற்கு கோவை வரவேண்டியிருந்தது. அதனால் அங்கேயே 447 கோடியில் அரசு மருத்துவ கல்லூரி கொண்டுவந்தோம், கூட்டுக்குடிநீர் திட்டம் கொடுத்தோம், படுகர் சமுதாயம் கொண்டாடும் ஹெத்தை அம்மன் திருவிழாவுக்கு அரசு விடுமுறை கொடுத்தோம், குன்னூர் நகரில் எமரால்ட் கூட்டுக்குடிநீர் திட்டம், பழங்குடியினர் மாணவர்களுக்கு அரசு கலை கல்லூரி, கேத்தியில் 172 வீடுகள், உதகையில் பழங்குடி பண்பாடு மையம், என பல திட்டம் கொடுத்தோம். அண்ணா திமுக ஆட்சியில் கொடுத்த மருத்துவக் கல்லூரியை திமுக ஆட்சியில் திறந்தனர். மேட்டுப்பாளையத்தில் இரண்டு பாலம், அடுக்குமாடி வீடுகள் கொடுத்தோம், சாலைகள் கொடுத்தோம், குடிநீர் திட்டம் கொடுத்தோம், கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும்.

திமுக ஆட்சியின் வரிச்சுமையால் பாதிக்கப்பட்ட மக்களின் துன்பத்தைக் களைய உதவித்தொகை 10 ஆயிரம் ரூபாய் வங்கியில் செலுத்தப்படும். அதிமுக ஆட்சிக்கு வந்தால், எல்லா குடும்பத் தலைவிக்கும் மாதம் 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லாமல் ஃப்ரிட்ஜ் வழங்கப்படும். சரியான நேரத்திற்கு பணியிடங்களுக்குச் செல்வதற்கும், படிக்கச் செல்வதற்கும் ஏதுவாக, 5 லட்சம் மகளிருக்கு அம்மா இரு சக்கர வாகனம் வாங்க, தலா 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் வாழ்வாதார உதவியாக 3 சிலிண்டர்கள் விலையின்றி வழங்கப்படும். பொங்கல் தொகுப்போடு ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

தீபாவளி தோறும் பெண்களுக்கு பட்டுச்சேலை வழங்கப்படும். பெண்களைப் போல இனி ஆண்களும் நகரப் பேருந்துகளில் கட்டணம் இல்லாமல் பயணிக்கலாம்.

பதிவு செய்த ஆட்டோ ஓட்டுனர்கள் புதிய ஆட்டோ வாங்க 75 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும். இஸ்லாமிய கிறிஸ்தவ மற்றும் ஏனைய சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த மகளிர் சுயமாக தொழில் தொடங்கினால் கூட்டுறவு சங்கத்தின் மூலம் தேவையான வட்டியில்லா கடன் வழங்கப்படும்.

மேட்டுப்பாளையத்தில் அண்ணா திமுக ஆட்சியில் புறவழிச்சாலை அமைப்பதாகச் சொன்னோம், அதை கொண்டுவருவோம். பில்லூர் அணை தூர்வாரி அணை முழு கொள்ளளவு கொண்டுவருவோம். அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும், கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றுவோம்.

இவ்வாறு எடப்பாடி பேசினார்.

# பெண்களுக்கு இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்: நயினார் நாகேந்திரன்

**ஈரோடு, ஏப். 17– பெண்களுக்கு இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் என்று நயினார் நாகேந்திரன் கூறினார்.**

ஈரோடு வில்லரசம்பட்டியில் உள்ள தனியார் விடுதியில் இன்று தமிழக பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

கோவையில் நாளை நடைபெறும் கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்து கொண்டு தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பேசுகிறார். .நாகர்கோவிலில் நடத்திய ரோடு ஷோ மூலம் மக்கள் எழுச்சியை ஒவ்வொருவரின் முகத்திலும் பார்க்க முடிந்தது. இதைத்தொடர்ந்து வரும் 19ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி சிவகிரியில் பா.ஜ.க. வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து பிரசாரம் செய்கிறார். மேலும் சிவகிரியில் ரோடு ஷோ செல்ல இருக்கிறார்.

நாட்டில் நடைபெறக்கூடிய கஞ்சா, போதைப்பொருள் பழக்கங்கள் முற்றிலுமாக அகற்றப்பட வேண்டும் என பெரும்பான்மையான பெண்கள் விரும்புகிறார்கள். பணம் வேண்டாம் டாஸ்மாக், போதைப்பொருட்களை நிறுத்தினால் போதும் என்ற மனநிலை பெண்களிடம் உள்ளது.

பாராளுமன்றத்தில் பெண்கள் 33 சதவீதம் இடஒதுக்கீடு குறித்து மறுவரையறை திட்டத்தை மத்திய அரசு தாக்கல் செய்தது. பெண்கள் இடஒதுக்கீடு 15ஆண்டுகளாக இருக்கும் பிரச்சனை. 543 வைத்து கொண்டு நாடாளுமன்றத்தில் எப்படி செயல்படுவது? தேவகவுடா பிரதமராக இருந்தபோதும் 33 சதவீதம் இட ஒதுக்கீடு மசோதா கொண்டு வரப்பட்டது. ஒவ்வொரு மசோதா கொண்டு வரும்போது ஏதாவது ஒரு மாநிலத்தில் தேர்தல் நடந்து கொண்டு இருக்கிறது ஒவ்வொரு மாநிலத்திலும் 50 சதவீதம் கொடுப்பது மூலம் நாடாளுமன்றத்தில் 850 இடங்கள் கொண்டு வரப்படும்.இதற்கு முதலமைச்சர் எதற்கெடுத்தாலும் எதிர்ப்பு போராட்டம் செய்கிறார். கடந்த 5 ஆண்டுகளும் மக்களுக்கான திட்டங்களை முதலமைச்சர் செய்யவில்லை. எதற்கெடுத்தாலும் மத்திய அரசு எதிர்ப்பு, டெல்லிக்கு தமிழ்நாட்டுக்கு போட்டி என்று இதையே தான் சொல்லி வருகிறார். இந்தியா சுதந்திரம் பெற்று 75 ஆண்டு காலம் ஆகிவிட்டது. அப்போது 40 கோடி மக்கள்தொகை இருந்தது. இன்று 140 கோடி மக்கள்தொகையாக மாறிவிட்டது.

இதன் அடிப்படையில் மாற்றம் வேண்டும். எண்ணிக்கையில் வளரக்கூடிய மாநிலத்திற்கும், பெண்களுக்கும் இடம் ஒதுக்கீடு கொடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். இதன் அடிப்படையில் மாநில எண்ணிக்கை கூட்டப்படுகிறது. எல்லா மாநிலங்களும் சீராக கூட்டப்படுகிறது. ஆனால் டெல்லிக்கு எதிராக போராடுவோம். பழைய ரூபத்தை காட்டுவோம் என திமுக கூறுகிறது. அப்படி கூறினால் திமுக பழையபடி ரவுடிசம் செய்யப் போகிறார்களா? ஏற்கனவே டாஸ்மார்க் கஞ்சாவால் மக்கள் அவதிப்படுகின்றனர். டாஸ்மாக், கஞ்சா செய்வதெல்லாமே திமுக சார்ந்தவர்கள்தான் மக்களை ஏமாற்றும் வகையில் இதை கையில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

# போலீசுக்கே பாதுகாப்பு இல்லை: எடப்பாடி பழனிசாமி பேச்சு...

(3–ம் பக்கத் தொடர்ச்சி)

விலை இல்லாமல் கொடுக்கப்பட்டது. அண்ணா திமுக ஆட்சி கொண்டு வந்த திட்டம் என்பதற்காக, அந்த திட்டத்தை நிறுத்தி விட்டார்கள், மீண்டும் அண்ணா திமுக ஆட்சிக்கு வந்ததும் அந்த திட்டம் செயல்படுத்தப்படும்.

லாரி தொழில் நலிவடைந்திருக்கிறது. அண்ணா திமுக ஆட்சிக்கு வந்த பிறகு இந்த தொழில் சிறக்க முழுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அண்ணா திமுக ஆட்சியில் இருக்கும்போது, கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யப்பட்ட துணி தேக்கம் என்பது எனது கவனத்திற்கு வந்தது. உடனடியாக அந்த துணியை விற்பனை செய்வதற்கு 350 கோடி ரூபாய் அரசின் சார்பில் மானியம் கொடுத்து, தேங்கி இருந்த துணிகள் விற்பனை செய்யப்பட்டது. நமது நெசவாளர் பெருமக்களுக்கு பசுமை வீடுகள் கட்டிக்கொடுத்தோம், விலை இல்லாமல் 300 யூனிட் மின்சாரம் கொடுத்தோம். இனி நமது நெசவாளர்களுக்கு 450 யூனிட் விலை இல்லாமல் கொடுப்போம்.

அதுபோல் விசைத்தறி தொழில் செய்பவர்களுக்கு ஆயிரம் யூனிட் மின்சாரம் விலை இல்லாமல் கொடுக்கிறோம். அண்ணா திமுக ஆட்சி அமைந்தவுடன் 1500 யூனிட் மின்சாரம் விலை இல்லாமல் கொடுப்போம். விசைத்தறி, கைத்தறி, விவசாயம், லாரி தொழில் செழிக்கும். அவர்கள் ஏற்றம் பெறுவார்கள் இது அதிமுகவின் உறுதிமொழி.

சட்டம் ஒழுங்கு சீர்கேடு அதிகரித்துவிட்டது. தமிழகத்தில் சிறுமி முதல் பாட்டி வரை பெண்களுக்கும், ஒட்டுமொத்த மக்களுக்கும் பாதுகாப்பில்லை. மக்களைக் காக்க வேண்டிய போலிஸுக்கும் இந்த ஆட்சியில் பாதுகாப்பில்லை. கடந்த 6 மாதங்களில் மட்டும் 6 காவலர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். தினமும் நாம் தங்கம் விலை நிலவரம் பார்ப்பதுபோல, கொலை நிலவரம் பார்க்கவேண்டிய சூழல் உருவாகிவிட்டது. அந்தளவுக்கு கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமைகள் நடக்காத நாளே இல்லை. மாணவர்கள் போதைப் பொருட்களால் சீர்கெட்டு அழிவதை நம் கண் முன் பார்க்க முடிகிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் காலம் வந்து விட்டது. அதிமுக ஆட்சிக்கு வந்தவுடன் கஞ்சா விற்பனை முற்றிலும் ஒழிக்கப்படும். போதைப்பொருள் இல்லாத மாநிலமாக தமிழகத்தை உருவாக்குவோம்.

சங்ககிரி விவசாயிகள் நிறைந்த பகுதி, கால்நடை வளர்ப்பு அதிகம். கலப்பினப் பசுக்களை வளர்க்கிறோம், பால் கறந்து விற்பனை செய்வதன் மூலம் பல குடும்பங்கள் பிழைக்கிறது. விவசாயி, விவசாயத் தொழிலாளர்கள் கஷ்டப்பட்டு பிழைக்கிறார்கள்., இதற்கு ஒரு மாற்றுத் தொழிலாக, கலப்பின பசுக்களை விவசாயிகளுக்கு உருவாக்கி தந்து, கூடுதலாக பால் கறக்க வேண்டும் என்ற அடிப்படையில் நான் அமெரிக்கா சென்று பார்வையிட்டேன்.

### 65 லிட்டர் பால் கறக்கும் பசு

அங்கு ஒரு நாளைக்கு ஒரு பசு 65 லிட்டர் பால் கறக்கிறது. அதே போல் தமிழ்நாட்டில் இருக்கிற விவசாயிக்கு, தொழிலாளிக்கு, நாம் கலப்பின பசுக்களை உருவாக்கி தருவதற்கு அவர்களுடன் கலந்து பேசினேன். அதன் அடிப்படையில் தலைவாசல் பகுதியில் ஆயிரத்து 200 கோடியில், 1.50 ஏக்கரில் பிரமாண்டமான கால்நடைப்பூங்கா அமைத்தோம், விவசாயம் செழிக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஆசியாவிலேயே மிகப்பெரிய கால்நடைப் பூங்கா கொண்டு வந்தேன்.

நான் இருக்கும் போதே கால்நடை ஆராய்ச்சி மையத்தை திறந்தேன். ஆனால், அது இப்போது மூடிக்கிடக்கிறது. இதில் என்ன காழ்ப்புணர்ச்சி? .இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால், விவசாயிகள் குடும்பம் செழித்திருக்கும். அதிமுக ஆட்சிக்கு வந்த பின், அந்த திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும்,

விவசாயிகளை பழிவாங்குகிறார்

அதன்பின்நூறுஏரிஎன்றஅற்புதமான திட்டம் தொடங்கினோம். அந்த திட்டத்தையும் செயல்படுத்தாமல் முடக்கி வைத்திருக்கிறார். 568 கோடி ரூபாய் திட்டம் இன்னமும் முழுமையடையவில்லை. ஸ்டாலின் அவர்களே, நீங்கள் விவசாயிகளைப் பழி வாங்குகிறீர்கள். என் மீது உள்ள கோபத்தை வைத்து சேலம் மாவட்ட மக்களை பழி வாங்குகிறீர்கள். மீண்டும் அதிமுக ஆட்சி அமைவது உறுதி. அப்போது இந்த நூறு ஏரி திட்டம் செயல்படுத்தப்படும். விடுபட்ட ஏரிகளையும் கண்டுபிடித்து நீர் நிரப்பப்படும். நமது வறண்ட பகுதியை செழிப்பான பகுதியாக உருவாக்கிக் காட்டுவேன்.

அண்ணா திமுக ஆட்சிக்கு வந்தவுடன் விலையில்லா, மாடு, ஆடு கொடுக்கப்படும் கோழி கூட நான் கொடுத்தேன். நெசவாளர்களுக்கு தீபாவளிக்கு பட்டுச்சேலை கொடுக்கப்படும்.

திமுக ஆட்சியின் வரிச்சுமையால் பாதிக்கப்பட்ட மக்களின் துன்பத்தைக் களைய உதவித்தொகை 10 ஆயிரம் ரூபாய் வங்கியில் செலுத்தப்படும். அதிமுக ஆட்சிக்கு வந்தால், எல்லா குடும்பத் தலைவிக்கும் மாதம் 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லாமல் ஃப்ரிட்ஜ் வழங்கப்படும். சரியான நேரத்திற்கு பணியிடங்களுக்குச் செல்வதற்கும், படிக்கச் செல்வதற்கும் ஏதுவாக, 5 லட்சம் மகளிருக்கு அம்மா இரு சக்கர வாகனம் வாங்க, தலா 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் வாழ்வாதார உதவியாக 3 சிலிண்டர்கள் விலையின்றி வழங்கப்படும்.

மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம். அண்ணா திமுக வின்னிங், நல்லாட்சி கம்மிங்.

இவ்வாறு எடப்பாடி பேசினார்.

# இஸ்ரேல் – லெபனான் இடையே 10 நாட்கள் தற்காலிக போர் நிறுத்தம்: அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவிப்பு

**இஸ்ரேல், ஏப். 17– இஸ்ரேல்–லெபனான் இடையே 10 நாட்கள் தற்காலிக போர் நிறுத்தம் மேற்கொள்ள இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்தார்.**

ஈரான் மீது அமெரிக்க, இஸ்ரேல் கடந்த பிப். 28ஆம் தேதி தொடங்கிய கூட்டுத் தாக்குதலைக் கண்டித்து, லெபனானின் ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்பினர் வடக்கு இஸ்ரேலில் ஏவுகணைகளை வீசி தாக்கினர். இதையடுத்து, கடந்த மார்ச் 2ஆம் தேதி முதல் இஸ்ரேல் ஹிஸ்புல்லா அமைப்பினருக்கு இடையே நடைபெற்றும் வரும் மோதலில் லெபனானில் 172 குழந்தைகள், 260 பெண்கள் உள்பட 2196 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில் இஸ்ரேல் – லெபனான் இடையே 10 நாட்கள் தற்காலிக போர் நிறுத்தம் மேற்கொள்ள இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்தார். வாஷிங்டனில் இரு நாடுகளுக்கும் இடையே பல்லாண்டுகளுக்குப் பிறகு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நேரடி பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்த முக்கிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இப்போர் நிறுத்தம் இன்று அதிகாலை 2.30 மணி (இந்திய நேரப்படி) முதல் அமலுக்கு வரும் என்றும், இது பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்ட உதவும் என்றும் டிரம்ப் தனது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டார்.

இச்சூழலில், இஸ்ரேல் மற்றும் லெபனான் நாட்டுத் தலைவர்களை வெள்ளை மாளிகைக்கு டிரம்ப் அழைத்துள்ளார். கடந்த 1983ஆம் ஆண்டுக்குப் பிறகு இரு நாட்டுத் தலைவர்களும் உயர்மட்ட அளவில் சந்தித்துப் பேசவுள்ளது இதுவே முதல்முறையாகும். இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, லெபனான் அதிபர் ஜோசப் அவுன் ஆகியோருடன் நடத்தப்பட்ட ஆலோசனைகள் மிகவும் ஆக்கபூர்வமாக அமைந்ததாகத் தெரிவித்த டிரம்ப், நிரந்தர அமைதியை எட்ட துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் தலைமையிலான குழுவினருக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# தமிழகத்தில் நாளை ராகுல் பிரச்சாரம்: ஸ்டாலின் பங்கேற்பாரா?

சென்னை, ஏப். 17– சட்டசபை தேர்தல் பிரச்சாரத்துக்காக மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான ராகுல் காந்தி, தமிழகத்துக்கு நாளை வரவுள்ளார். அவர் பங்கேற்கும் பிரச்சார கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்பாரா என்பது குறித்து இதுவரை முடிவு எடுக்கப்படவில்லை.

சென்னை வரும் ராகுல் காந்தி பொன்னேரி, சோளிங்கர், துறையூர் ஆகிய தொகுதிகளில் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து பொதுக்கூட்டத்தில் பங்கேற்று வாக்கு சேகரிக்கவுள்ளார்.

மீண்டும் ஏப்ரல் 20ம் தேதி தமிழகம் வரும் ராகுல் காந்தி, குளச்சல், ஸ்ரீவைகுண்டம், சங்கரன்கோவில், அறந்தாங்கி, மேலூர் ஆகிய தொகுதிகளில் பிரச்சாரம் செய்யவுள்ளார்.

இந்தக் கூட்டங்களில் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவும் பங்கேற்று பிரச்சாரம் செய்யவுள்ளார்.

ராகுல் காந்தி பங்கேற்கும் பிரச்சார கூட்டங்களில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்பாரா என்பது இதுவரை உறுதி செய்யப்படவில்லை. புதுச்சேரி சட்டசபை தேர்தல் பிரச்சாரத்துக்கு சமீபத்தில் ராகுல் காந்தி வந்து, பொதுக்கூட்டத்தில் பங்கேற்றபோது அதில் ஸ்டாலின் கலந்து கொள்ளவில்லை. ஆனால் வரும் 20–ந்தேதி நடைபெறும் ராகுல் பிரச்சாரத்தில் ஸ்டாலின் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் பங்கேற்பார்கள் என தெரிகிறது.

# ஓசூரில் சுட்டெரிக்கும் வெயிலில் ஜூஸ் போட்டுக்கொடுத்து ஆதரவு திரட்டிய அதிமுக வேட்பாளர் பாலகிருஷ்ணா ரெட்டி



கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் சட்டமன்ற தொகுதியில் இரண்டாவது முறையாக அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர் பாலகிருஷ்ணா ரெட்டி களமிறங்கி தொகுதி முழுவதும் தீவிர பரப்புரை மேற்கொண்டு வருகிறார். ஓசூர் மாநகர பகுதிகளில் பிரச்சாரம் முடித்து கர்னூர் பகுதிக்கு பிரச்சாரம் மேற்கொள்ள சென்ற பாலகிருஷ்ணா ரெட்டி சுட்டெரிக்கும் வெயிலின் தாக்கத்தை தணிக்கும் வகையில் தன்னுடன் வந்த அதிமுக, பாஜக, பாமக உள்ளிட்ட கட்சியினருக்கும் பொதுமக்களுக்கும் கரும்புச்சாறு போட்டுக்கொடுத்து வாக்குகளை சேகரித்தார். உடன், பகுதி செயலாளர் வாசுதேவன், மாவட்ட அவை தலைவர் நாராயணன், மாமன்ற உறுப்பினர் லட்சுமி ஹேமகுமார் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் ஆகியோர் உள்ளனர்.



# பெருந்துறையில் மதிமுக ஒன்றிய செயலாளர் அதிமுகவில் ஐக்கியம்

**ஈரோடு, ஏப். 17–**

ஈரோடு மாவட்டம் பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் மதிமுகவின் நிர்வாகியாக செயல்பட்டு வந்த காளியப்பன், அக்கட்சியிலிருந்து விலகி அ.தி.மு.க.வில் இணைந்தார்.

கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சி பகுதியில் செயல்பட்டு வந்த காளியப்பன், கடந்த 1992 முதல் மதிமுகவில் பல்வேறு பொறுப்புகளில் இருந்தார். மேலும், சமீப காலமாக பெருந்துறை ஒன்றிய ஒருங்கிணைந்த செயலாளராகவும் பணியாற்றி வந்தார்.

இந்நிலையில், அவர் அ.தி.மு.க.வில் இணைந்ததைத் தொடர்ந்து, பெருந்துறை சட்டமன்றத் தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் ஜே.கே.எஸ். ஜெயக்குமார் அவரை வரவேற்று, பொன்னாடை அணிவித்து வாழ்த்தினார்.

இந்த நிகழ்வின்போது மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் கயிலங்கிரி குப்புசாமி, பெருந்துறை நெசவாளர் அணி ஒன்றிய செயலாளர் மோகன் குமார், கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சி துணைத்தலைவர் சரவணன், மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி இணைச்செயலாளர் சிவநாதன், கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சி வார்டு உறுப்பினர் குணசேகரன், மாவட்ட விவசாய அணி செயலாளர் சாமிநாதன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்

அரசியல் தரப்பில், நீண்ட காலமாக ஒரு கட்சியில் இருந்த நிர்வாகி மாற்றுக் கட்சியில் இணைந்திருப்பது, உள்ளூர் அரசியல் சூழலில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும் எனக் கருதப்படுகிறது.




# கோவையில் 'பிரேக்பாஸ்ட் டிரைவ்' நிகழ்ச்சி: ஸ்பின்னி நிறுவனம் ஏற்பாடு

**கோவை, ஏப். 17–**

பயன்படுத்திய கார்கள் விற்பனைத் துறையில் செயல்படும் ஸ்பின்னி நிறுவனம், சமூக பங்கேற்புடன் நடைபெறும் 'பிரேக்பாஸ்ட் டிரைவ்' (காலை நேரப் பயணம்) நிகழ்ச்சியை கோவையில் நடத்தியது. சண்டிகரில் தொடங்கப்பட்ட இந்த முயற்சி, அதன் அடுத்த கட்டமாக கோவையில் நடைபெற்றது.

பீளமேடு பகுதியில் உள்ள பன் ரிபப்ளிக் மால் வளாகத்தில் அமைந்துள்ள ஸ்பின்னி கார் மையத்தில் இருந்து அதிகாலையில் இந்த பயணம் தொடங்கியது. இதில் பங்கேற்றவர்கள் தங்கள் வாகனங்களில் ஆனைக்கட்டியை நோக்கிப் புறப்பட்டனர். நகர நெரிசல் இல்லாத சாலைகள் மற்றும் அமைதியான சூழல் பயணத்திற்கு ஏற்றதாக இருந்தது. ஆனைக்கட்டியில் உள்ள எஸ்.ஆர்.ஜங்கிள் ரிசார்ட்டில் இந்தப் பயணம் நிறைவடைந்தது.

முன்கூட்டியே திட்டமிடப்பட்ட பயண நிரல் இன்றி, நிகழ்நேர அனுபவத்தை ரசிப்பதே இந்த நிகழ்ச்சியின் நோக்கமாக அமைந்தது. "ஆனைக்கட்டி காலைப்பொழுது, பிரெஷ் பில்டர் காபி மற்றும் எளிய உரையாடல்கள்" என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்தப் பயணத்தில், குடும்பத்தினரும் நண்பர்களும் இணைந்து சாலையிலும் காலை உணவின் போதும் நேரத்தை பயனுள்ள வகையில் செலவிட்டனர். பயணத்தின் இலக்கை விட அனுபவத்திற்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டது. கேளிக்கையான விளையாட்டுகள் மற்றும் சிறிய பரிசுகள் நிகழ்வை மேலும் சிறப்பித்தன.

பயணத்தின் தருணங்கள் குறும்படமாக பதிவு செய்யப்பட்டுள்ளன. அதிகாலை நேரத்தில் கோவை நகரம் விழித்தெழுவதற்கு முன்பாக தொடங்கிய இந்தப் பயணம் மற்றும் ஆனைக்கட்டியை நோக்கிச் செல்லும் வழித்தடங்கள் அதில் இடம்பெற்றுள்ளன.

இதுகுறித்து நிறுவனத்தின் தரப்பில், வாடிக்கையாளர்களுடனான உறவை வணிகத்தைத் தாண்டி வலுப்படுத்தும் நோக்கில் இத்தகைய நிகழ்வுகள் நடத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பாதுகாப்பான மற்றும் பொறுப்பான ஓட்டுநர் பழக்கத்தை ஊக்குவிப்பதுடன், சமூக உணர்வை வளர்ப்பதும் இந்த முயற்சியின் நோக்கமாகக் குறிப்பிடப்பட்டது.

இந்த 'பிரேக்பாஸ்ட் டிரைவ்' நிகழ்ச்சியை நாட்டின் பல்வேறு நகரங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் நிறுவனம் தெரிவித்துள்ளது.



கோவை மாவட்டம் வால்பாறை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆனைமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலின்போது வாக்குப்பதிவில் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் அளித்த வாக்கினை உறுதி செய்யும் இயந்திரங்கள் ஆகியவற்றில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர் மற்றும் குறியீடுகளை பதிவேற்றம் செய்யும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலரும் கலெக்டருமான பவன்குமார் கிரியப்பனவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் தேர்தல் நடத்தும் அலுவலர் சங்கீதா, பொள்ளாச்சி வட்டாட்சியர் ஜெய்குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# தேர்தல் நாளன்று இலவச பேருந்து சேவை யார்... யாருக்கு?

**கிருஷ்ணகிரி, ஏப். 17–**

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் ஏப்ரல் 23 அன்று நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள், பார்வை குறைபாடு உடையோர் மற்றும் அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கும் சாதாரண நகரப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலரும் கலெக்டருமான தினேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, தேர்தலில் அனைத்து தரப்பு மக்களும் பங்கேற்கும் வகையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் எளிதாக வாக்களிக்கும் மையங்களுக்கு சென்று தங்கள் வாக்குரிமையை பயன்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தேர்தல் நாளன்று பயணம் மேற்கொள்ளும் பயணிகள் ஆதார் அட்டை மற்றும் வாக்காளர் தகவல் சீட்டு அல்லது வாக்காளர் அடையாள அட்டை ஆகியவற்றை காட்டி நகரப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் செய்யலாம் என்றும் மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## பெயர் மாற்றம்

எனது மகள் கவின் ஸ்பந்தனா, பிறந்த தேதி: 16.12.2009 (பிறந்த ஊர்: வத்தலக்குண்டு) வசிப்பிடம் நெ.4T, ஃபேரிலேண்ட் சான்சியா அபார்ட்மெண்ட்ஸ், நேதாஜி நகர், ராமநாதபுரம், கோயம்புத்தூர்–641045 இனிமேல் **கவின் ஸ்பந்தனா MS** என்று அழைக்கப்படுவாள்.

மனோகரன் மாசாணம்
தந்தை

## பெயர் மாற்றம்

I, KRISHNAKUMARI (GIVEN NAME), DHANYESH (SURNAME) D/O.MOHANDAS, பிறந்த தேதி: 23.07.1973, (பிறந்த ஊர் : PALAKKAD, KERALA). NO 83, SHUBHAAPTHI ILLAM, KAMALAMUTHU NAGAR, POLLACHI, MAHALINGAPURAM POST, COIMBATORE–642002, என்ற முகவரியில் வசித்து வரும் நான் இனி **KRISHNAKUMARI (GIVEN NAME), MOHANDAS (SURNAME)** என்று அழைக்கப்படுகிறேன்.

KRISHNAKUMARI (GIVEN NAME),
DHANYESH (SURNAME)

## பெயர் மாற்றம்

TANMAY SUBHASH MEHTA, S/O.SUBHASH MEHTA, பிறந்த தேதி: 03/04/1999, (பிறந்த ஊர்: TIRUPPUR TAMILNADU) 18/2, OM BUILDING, J.G NAGAR, 5TH STREET, KUMARANATHAPURAM, TIRUPPUR CITY-641602, TAMIL NADU, INDIA. என்ற முகவரியில் வசிக்கும் எனது மகன் இனி **TANMAY MEHTA** என்று அழைக்கப்படுகிறான்.

TANMAY SUBHASH MEHTA

## பெயர் மாற்றம்

JEYARAJ, S/O. RAMASAMY, பிறந்த தேதி: 04/06/1963, (பிறந்த ஊர்: TIRUPPUR) DOOR NO- 4/24, MUTHU NAGAR EXTENSION, 5TH VEEDHI, TIRUPPUR - 641607, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **JAYARAJ** என்று அழைக்கப்படுகிறேன்.

JEYARAJ

## பெயர் மாற்றம்

SARANYA (GIVEN NAME) JEYARAJ (SURNAME), D/O.JEYARAJ, பிறந்த தேதி: 15/08/1995 (பிறந்த ஊர்: TIRUPPUR) DOOR NO- 4/24, MUTHU NAGAR EXTENSION, 5TH VEEDHI, TIRUPPUR - 641607, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SARANYA (GIVEN NAME) JAYARAJ (SURNAME), D/O.JAYARAJ.** என்று அழைக்கப்படுகிறேன்.

SARANYA (GIVEN NAME)
JEYARAJ (SURNAME)

## II JUDGE BEFORE THE MOTOR ACCIDENT CLAIMS TRIBUNAL AT CHENNAI

**O.P. No. 1977 of 2012**

1. Thilagavathy Prema
2. A. Johnson,

......Petitioners

–VS–

1. R. Vinodh Xavier
2. The Oriental Insurance Co. Ltd.,
3. Dennis Prem Shaju.

...Respondents

To,
(R3) Dennis Prem Shaju,
S/o. E. Kirubakaran,
Door No.5, Meenakshi Garden,
G.N. Mills Post, Coimbatore – 641 029.

Please take notice that the above M.C.O.P No.1977 of 2012 is posted for your appearance on 20.04.2026 at about 10.30 hrs. Please be present before the above said Court on the day, failing which the matter will be decided in your absence.

**(V.Velu)**
**Counsel for Petitioner**

## மாண்பமை சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம்

**E.P.No. 1/2026**

S.வாணிஸ்ரீ,
...மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர்
–எதிர்–
B.பார்த்திபன்
த/பெ.பத்திரன்
கதவு எண்.51 மேட்டுக்கடை ரோடு,
காரமடை, மேட்டுப்பாளையம்
வட்டம், கோயமுத்தூர்–641104.
...எதிர்மனுதாரர்/தீர்ப்புக்கடனாளி

அறிவிப்பு

மனுதாரர், வாடகை நிலுவைத்தொகையை செலுத்தக்கோரியும் தவறும் பட்சத்தில் மனுச்சொத்திலிருந்து தங்களை வெளியேற்றக்கோரியும் நிறைவேற்று மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவானது வருகின்ற 10.06.2026ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி நீதிமன்றத்தில் 10.06.2026 ம் தேதியன்று காலை 10.00 மணியளவில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டியது. தவறும் பட்சத்தில் தங்களுக்கெதிராக மனு ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**V.மைதிலிM.COM.,B.L.,**
**R.நாகராஜன், B.COM.,LL.B.,**
**K.சண்முகசுந்தரம், B.A.,B.L.,**
**T.சென்னகேசவன், B.A.,B.L.,**
**வழக்கறிஞர்கள், கோயமுத்தூர்**

## ENROLLMENT NOTICE

After Ten days of the publication of this notice and within THREE Months thereafter, I, BALAMURALI R, S/o. RAMADASS A, Aged 32 Years, Residing at 88/27 A, Abirami Nagar, Kuniyamuthur Post, Near JJ Nagar, Coimbatore -641008, Tamil Nadu. Intend having my enrollment as an Advocate moved before the Bar council of Tamilnadu and Puducherry, Bar Council building, High court Campus, Chennai-600104. Those who have any valid objections may notify the same to the bar council within 10 days.

**BALAMURALI R**

## பெயர் மாற்றம்

Mohammed Babu S
S/o.N.Sarbutheen
பிறந்த தேதி 15.08.1997
எண்.82, சிங்கப்பூர் நகர்
உடுமலைப்பேட்டை, திருப்பூர்
642 126 என்ற முகவரியில்
வசிக்கும் நான் இனி
**MOHAMED BABU S**
என்று அழைக்கப்படுகிறேன்.

## உயர்திரு பொள்ளாச்சி சார் ஆட்சியர் அவர்கள், பொள்ளாச்சி

சிவரஞ்சன். கா.
த/பெ. காளியப்பன் சொ. (லேட்) ,
பழைய கதவு எண் 36/176,
புதிய கதவு எண் 4463,
சிறுகுன்றா எஸ்டேட். மேல்பிரிவு ,
சிறுகுன்றா எஸ்டேட் அஞ்சல்,
வால்பாறை வட்டம் ,
கோவை மாவட்டம்642127.,
...மனுவாதி

அறிவிப்பு

எனது தாய் ஜெயலட்சுமி. கா தந்தை காளியப்பன் சொ. (JAYALAKSHMI.K, KALIAPPAN.S) ஆகியோரின் மகனான சிவரஞ்சன். கா (SIVARANJAN.K) ஆகிய நான் கடந்த 14.09.1992 அன்று மேற்படி விலாசத்தில் பிறந்ததை பிறப்பு பதிவேட்டில் பதிவு செய்து பிறப்புச்சான்றிதழ் வழங்கக் கோரி பொள்ளாச்சி சார் ஆட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளேன் இதுதொடர்பாக ஆட்சேபனை இருப்பவர்கள் 7 நாட்களுக்குள் நேரிலோ அல்லது எழுத்துப்பூர்வமாகவோ தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**சிவரஞ்சன். கா**
**மனுதாரர்**

## உயர்திரு மாவட்ட நடுவர்/ மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் கோயமுத்தூர்

**NA.KA.No. /2026**

M.கணேசன்
த/பெ.மணிவேல்
5/57B, மதுரைவீரன் கோவில் வீதி
இடையார்பாளையம்
குனியமுத்தூர்
கோயமுத்தூர்–641008,
...மனுவாதி
–எதிர்–
தாசில்தார் அவர்கள்
கோயமுத்தூர் தெற்கு.
...எதிர்மனுவாதி

அறிவிப்பு

இதனால் தெரிவிப்பது என்னவென்றால் எனது தாயார் அருக்காணி கோயமுத்தூர், குனியமுத்தூர், இடையார்பாளையம், மதுரைவீரன் கோவில் வீதி, கதவு எண்.5/57B என்ற விலாசத்தில் உள்ள வீட்டில் கடந்த 05.07.1976ம் தேதி இறந்ததை பதிவு செய்து இறப்புச் சான்றிதழ் வழங்கிட உத்திரவு கோரி நான் மேற்படி சார் ஆட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் ஆட்சேபனை ஏதும் உள்ளவர்கள் மேற்படி கோவை மாவட்ட நடுவர்/மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்றிலிருந்து 15 நாட்களுக்குள் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.

**M.கணேசன்**
**மனுதாரர்**

## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
## கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட அலுவலகம்

### பொது அறிவிப்பு

**இணையவழி விண்ணப்ப எண்.0UUJO5Q6**

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டப்பகுதிக்கான முழுமைத் திட்டம் அரசாணை எண்.103 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 04.07.2025–ல் அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

மேற்படி மனுதாரர்கள் Mr.Thangaraj and Kamadenu, கோயம்புத்தூர் ஆகியோர் ஒப்புதல் அளிக்கப்பட்ட கோயம்புத்தூர் முழுமைத்திட்டம் 2041–ல்,கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், கூடலூர் கிராமம், புல எண்.1371/1B,1C,2,3ல் 2.171/2 ஏக்கர் அல்லது 8800.00 சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் இடத்தினை விவசாய உபயோக பகுதியிலிருந்து குடியிருப்பு உபயோக பகுதியாக நிலபயன் மாற்றம் கோரியுள்ளார்கள். மனுதாரர் உத்தேசத்தின் மீது ஆட்சேபனை மற்றும் ஆலோசனை ஏதாவது இருப்பின் 30 நாட்களுக்குள் கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**உறுப்பினர் செயலர் /இணை இயக்குநர், (மு.கூ.பொ)**
**கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்,**
**மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**கோயம்புத்தூர்.**

## இன்ஸில் ஹைட்ரோபவர் அண்ட் மேங்கனீஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : இன்ஸில் ஹவுஸ், கதவு எண் : 103-107, திருவேங்கடசாமி சாலை மேற்கு, ஆர்.எஸ். புரம், கோயமுத்தூர் - 641002. தொலைபேசி எண் : (+91/0) (422) 4522922 தொலை நகல் : (+91/0) (422) 4522925
மின் அஞ்சல் : secretarial@indsil.com | வலை : www.indsil.com CIN: L27101TZ1990PLC002849

### காகித வடிவிலான பங்கு பத்திரங்களின் பரிமாற்றம் மற்றும் மின்னணு மயமாக்கலுக்கான (DEMAT) சிறப்பு சாளரம் - அறிவிப்பு

ஜனவரி 30, 2026 தேதியிட்ட SEBI சுற்றறிக்கை எண். HO/38/13/11(2)2026-MIRSD-POD/I/3750/2026 இன் படி, ஏப்ரல் 1, 2019 க்கு முன்பு விற்கப்பட்ட/வாங்கிய காகித வடிவிலான பங்குகளை பரிமாற்றம் மற்றும் மின்னணு மயமாக்குவதை ('டிமேட்') எளிதாக்க, பிப்ரவரி 5, 2026 முதல் பிப்ரவரி 4, 2027 வரை ஒரு வருட காலத்திற்கு ஒரு சிறப்பு சாளரம் திறக்கப்பட்டுள்ளதாக பங்குதாரர்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வசதி தங்கள் வசம் அசல் பங்குச் சான்றிதழ்களை வைத்து இருப்பவர்களுக்கு மட்டுமே கிடைக்கும். அசல் பங்குச் சான்றிதழ்களை வைத்திருப்பவர்கள், பின்வரும் இரண்டு வகைகளின் கீழ் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

(I) 1 ஏப்ரல் 2019க்கு முன் சமர்ப்பிக்கப்பட்ட பரிமாற்றக் கோரிக்கைகள், ஆவணங்கள் அல்லது செயல்முறையில் உள்ள குறைபாடுகள் காரணமாக அல்லது பிற காரணங்களால் நிராகரிக்கப்பட்டோ / திருப்பி அனுப்பப்பட்டோ / பரிசீலிக்கப்படாமலோ இருந்தால்.

(ii) 1 ஏப்ரல் 2019க்கு முன் பரிமாற்றப் பத்திரம் (Transfer Deed) நிறைவேற்றப்பட்டிருந்தால் புதிய பரிமாற்றக் கோரிக்கைகளை சமர்ப்பிக்கலாம்.

இந்த சிறப்பு சாளரத்தின் கீழ் பரிமாறப்படும் பங்குகள், டிமேட் வடிவத்தில் மட்டுமே வரவு வைக்கப்படும். மேலும், அப்பங்குகள் பரிமாற்றப் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து ஒரு ஆண்டுக் காலத்திற்கு அவை கட்டாய முடக்கத்தில் (Lock-in) இருக்கும். இந்த முடக்க காலத்தில், அத்தகைய பங்குகளை மீண்டும் மாற்றவோ, அடமானம் வைக்கவோ அல்லது உரிமையாகக் குறிக்கவோ முடியாது.

பங்குகளை விற்பவர்க்கும் வாங்குபவுக்கருக்கும் இடையே ஏதேனும் தகராறு இருந்தாலோ அல்லது, பங்குகள் ஏற்கனவே முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி (IEPF)க்கு மாற்றப்பட்டிருந்தாலோ, அது தொடர்பான பரிமாற்றக் கோரிக்கைகள் இச்சிறப்பு சாளரத்தின் கீழ் பரிசீலிக்கப்படமாட்டாது.

பங்குதாரர்கள் தேவையான ஆவணங்களை நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரான MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் (முன்னர் லிங்க் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்), சூர்யா 35, மேஃப்ளவர் அவென்யூ, செந்தில் நகர் பின்னால், சவுரிபாளையம் சாலை, கோயம்புத்தூர் – 641028, தமிழ்நாடு, இந்தியா, தொலைபேசி: 0422-2314792, 2539835, 2539836, மின்னஞ்சல்: investor.helpdesk@in.mpms.mufg.com என்ற முகவரியில் சமர்ப்பிப்பதன் மூலம் இந்த வாய்ப்பைப் பெறலாம்.

### இரண்டாவது 100 நாட்கள் பிரச்சாரம் - உரிமை கோரப்படாத ஈவுத்தொகை கள் IEPF-க்கு மாற்றப்படுவதைத் தடுக்க KYC மற்றும் பிற தொடர்புடைய புதுப்பிப்புகளுக்கான " சக்ஷம் நிவேஷக் "

கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தின் கீழ் செயல்படும் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்திடமிருந்து (IEPFA) மார்ச் 27, 2026 அன்று பெறப்பட்ட தகவலின் அடிப்படையிலும், அந்த ஆணையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட " நிவேஷக் ஷிவிர் " – இன் நோக்கங்களுக்கு இணங்கவும், நிறுவனம் ஏப்ரல் 1, 2026 முதல் ஜூலை 9, 2026 வரையிலான காலத்திற்கு " சக்ஷம் நிவேஷக் " என்ற 100 நாள் பிரச்சாரத்தைத் மீண்டும் தொடங்கியுள்ளது. இந்த பிரச்சாரத்தின் போது, 2024-25 நிதியாண்டிற்கான ஈவுத்தொகையைப் பெறாத அல்லது தங்கள் KYC மற்றும் நியமனத்தைப் புதுப்பிக்காத அல்லது உரிமை கோரப்படாத ஈவுத்தொகைகள் மற்றும் பங்குகள் தொடர்பான ஏதேனும் சிக்கல்கள் உள்ள அனைத்து பங்குதாரர்களும், நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவரை (RTA) அதாவது MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் (முன்னர் லிங்க் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்), சூர்யா 35, மேஃப்ளவர் அவென்யூ, செந்தில் நகர் பின்னால், சவுரிபாளையம் சாலை, கோயம்புத்தூர் - 641028, தொலைபேசி: +91 422 4958995 / 2539835/36, மின்னஞ்சல்: investor.helpdesk@in.mpms.mufg.com–இல் அணுகலாம்.

மேற்கண்ட பிரச்சாரத்தின் விவரங்கள் மற்றும் KYC விவரங்களைப் புதுப்பித்தல் / பதிவு செய்வதற்கான நடைமுறை மற்றும் கோரப்படாத ஈவுத்தொகை விவரங்கள் ஆகியவை நிறுவனத்தின் வலைத்தளமான www.indsil.com-இல் கிடைக்கின்றன.

**இன்ஸில் ஹைட்ரோபவர் அண்ட் மேங்கனீஸ் லிமிடெட்டுக்காக**

இடம் : கோயமுத்தூர்
தேதி : 17.04.2026

**காளிதாஸ் .யு.**
நிறுவன செயலாளர்



அண்ணா திமுக பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி கே.பழனிசாமி, சேலம் நெடுஞ்சாலை நகரில் உள்ள அவரது இல்லத்தில், மாவீரன் தீரன் சின்னமலையின் 271வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



# "தமிழகத்தின் வளர்ச்சி பணிகளுக்கு உதயசூரியனிடம் உரிய பதில் இல்லை"

## சூளகிரியில் கே.பி.முனுசாமி பேச்சு

**கிருஷ்ணகிரி, ஏப். 17–**

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சூளகிரி, சாமனப்பள்ளி, அயர்னப்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் அதிமுக வேட்பாளர் கே.பி.முனுசாமி எம்எல்ஏ வியாழக்கிழமை தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார். 40க்கும் மேற்பட்ட கிராமங்களில் அவர் வாக்குகள் சேகரித்தார்.

அப்போது பொதுமக்களிடம் அவர் பேசியதாவது:

“கடந்த சட்டமன்றத் தேர்தலில் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி தி.மு.க. ஆட்சியைப் பிடித்தது. ஆனால் அவற்றில் பலவும் நிறைவேற்றப்படவில்லை. மக்கள் அளித்த ஆதரவுக்கு உரிய பதில் கிடைக்கவில்லை.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான ஆட்சியில், 2011ஆம் ஆண்டு வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் 1.76 கோடி குடும்பங்களுக்கு மிக்சி, பேன், கிரைண்டர் உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்டன. மேலும், மூன்று லட்சம் பேருக்கு பசுமை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன.

அதன்பின்னர் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான ஆட்சியில் 11 மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. விவசாயிகள் பயன்பெறும் பல்வேறு திட்டங்கள், தொழிற்சாலைகள் உள்ளிட்ட வளர்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் தற்போதைய ஆட்சியில் பல திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

2021 தேர்தலில் அளிக்கப்பட்ட சில வாக்குறுதிகள் சிலிண்டர் மானியம், நீட் தேர்வு ரத்து, 100 நாள் வேலைத் திட்டத்தை 150 நாட்களாக உயர்த்துதல், மின்கட்டணத்தில் மாற்றங்கள் போன்றவை நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்.

தமிழகம் முழுவதும் வளர்ச்சி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட, சட்டம் ஒழுங்கு நிலை சீராக இருக்க, போதைப் பொருள் பரவலை கட்டுப்படுத்த, அ.தி.மு.க.க்கு ஆதரவு அளிக்க வேண்டும். அ.தி.மு.க. ஆட்சி அமைந்தால் மட்டுமே கிருஷ்ணகிரி மாவட்டம் வளர்ச்சி பாதையில் செல்லும்,” என்றார்.

பிரசாரத்தில் கட்சியினர் மற்றும் உள்ளூர் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



# மக்களோடு இணைந்து செயல்படுபவர்கள் அதிமுகவினர்: கே.ஆர்.ஜெயராம் பேச்சு

**கோவை, ஏப். 17–**

கோவை மாவட்டம் சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளர் கே.ஆர்.ஜெயராம் வெள்ளிக்கிழமை தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார்.

ஒண்டிப்புதூர், சுங்கம், சவுடேஸ்வரி நகர், வசந்தா மில் சாலை, கமலா மில் குட்டை உள்ளிட்ட பகுதிகளில் வீதி வீதியாக சென்று அவர் வாக்குகள் சேகரித்தார். அவருக்கு பொதுமக்கள் பட்டாசு வெடித்தும், மாலை அணிவித்தும், ஆரத்தி எடுத்தும் வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து, அப்பகுதியில் உள்ள ஸ்ரீபால விநாயகர் மற்றும் அய்யப்பன் கோவில்களில் சிறப்பு தரிசனம் செய்தார்.

பின்னர் பொதுமக்களிடம் அவர் பேசியதாவது:

“தற்போதைய ஆட்சியில் வீட்டு வரி, சொத்து வரி, குடிநீர் கட்டணம் உள்ளிட்டவை அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. இதனால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அ.தி.மு.க. ஆட்சியில் மக்களுடன் இணைந்து சிரமமின்றி ஆட்சி நடத்தப்பட்டது. கடந்த 10 ஆண்டுகால ஆட்சி இதற்கு எடுத்துக்காட்டாகும். நான் முன்பு சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, வாரத்தின் அனைத்து வேலை நாட்களிலும் இலவச இ சேவை மையம் செயல்படுத்தப்பட்டு, பொதுமக்களுக்கு சேவை வழங்கப்பட்டது. மேலும், தொகுதியில் பல்வேறு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பாதாள சாக்கடை திட்டத்தில் மீதமுள்ள பணிகள் விரைவில் நிறைவடையும். இம்முறையும் இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து அதிக வாக்கு வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்ய வேண்டும்,” என்றார்.



# "அண்ணா திமுக ஆட்சியில் அரசு பேருந்தில் ஆண்களும் இலவசமாக பயணம் செய்யலாம்"

## பவானியில் கே.சி.கருப்பணன் வாக்குறுதி

ஈரோடு, ஏப். 17–

ஈரோடு மாவட்டம் பவானி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பவானி, அம்மாபேட்டை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அ.தி.மு.க. வேட்பாளர் கே.சி.கருப்பணன் தீவிர தேர்தல் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்.

இதன் தொடர்ச்சியாக, ஓடத்துறை, மலைமேடு, பொன்னேரி, மாரப்பம்பாளையம், செல்லகுமார பாளையம், கோணக்காடு, இந்திரா நகர், நஞ்சப்பா நகர், பாலப்பாளையம், கோவில்பாளையம், சூரியம்பாளையம், கோப்பக்காடு, ரங்கன்காட்டூர், புதுஆலத்தூர், குன்னத்தூர், தாசநாயக்கனூர், உப்புக்காரப்பள்ளம், பாலக்காட்டூர், ஆலத்தூர், செல்வன் நகர், செம்பூத்தாம்பாளையம், தயிர்பாளையம், காமராஜ் நகர், வளையக்காரபாளையம், பெரியபுலியூர், எம்ஜிஆர் நகர், சேவாகவுண்டனூர், ஜேஜே நகர், காசிலிங்கபுரம், கோட்டம்பாளையம், சூளைமேடு உள்ளிட்ட 57க்கும் மேற்பட்ட கிராமங்களில் அவர் வாக்குகள் சேகரித்தார்.

பிரசாரத்தின் போது அவர் பேசியதாவது:

“கடந்த 10 ஆண்டுகால ஆட்சியில் பெண்களின் திருமணத்திற்கு தாலிக்குத் தங்கம் வழங்கப்பட்டது. மேலும், பள்ளி மாணவர்களுக்கு இலவச மிதிவண்டிகள், லேப்டாப்கள் வழங்கப்பட்டன. வேலைக்கு செல்லும் பெண்களுக்கு மானியத்தில் ஸ்கூட்டர் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. அம்மா உணவகங்கள் மூலம் குறைந்த கட்டணத்தில் தரமான உணவு வழங்கப்பட்டது.

அ.தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.10,000 கருணைத் தொகை வழங்கப்படும். மேலும், ரூ.10,000 மதிப்புள்ள குளிர்சாதன பெட்டி வழங்கப்படும். அரசு நகரப் பேருந்துகளில் பெண்கள் மட்டுமின்றி, ஆண்களுக்கும் கட்டணமின்றி பயணம் செய்யும் வசதி ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாடு மக்களின் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் நிறைவேற இரட்டை இலை சின்னத்திற்கு வாக்காளர்கள் ஆதரவு அளிக்க வேண்டும்,” என்றார்.

பிரசாரத்தில் ஈரோடு வடக்கு மாவட்ட பாமக செயலாளர் ஜெகதீசன், அதிமுக ஒன்றியச் செயலாளர்கள் ஜெகதீசன், மேகநாதன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கா.சு. மகேந்திரன், கவுந்தப்பாடி ஊராட்சி முன்னாள் தலைவர் பாவா தங்கமணி உள்ளிட்ட பலர் உடன் சென்றனர்.



# குமாரபாளையத்தில் அண்ணா திமுகவின் சாதனைகளை பட்டியலிட்டு முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி பிரச்சாரம்

**ஈரோடு, ஏப். 17–**

குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பள்ளிபாளையம், படைவீடு பேரூராட்சி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் அ.தி.மு.க. வேட்பாளர் பி.தங்கமணி வியாழக்கிழமை தீவிர தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார்.

உப்புபாளையம், கவுண்டனூர், படைவீடு, வால்ராசாபாளையம், மோடமங்கலம், ஆனங்கூர், நெட்டவேலம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் காலை முதல் இரவு வரை அவர் வாக்குகள் சேகரித்தார்.

அப்போது பொதுமக்களிடம் அவர் பேசியதாவது:

“தேசிய ஜனநாயக கூட்டணியின் ஆதரவுடன், அ.தி.மு.க. சார்பில் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளராக உங்கள் முன் வந்துள்ளேன். எனக்கு அளித்த வரவேற்புக்கு நன்றி.

கடந்த ஐந்து ஆண்டுகளாக நடைபெற்று வரும் ஆட்சியில் பெண்களின் பாதுகாப்பு குறித்து கவலைகள் எழுந்துள்ளன. குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. போதைப்பொருள் பிரச்சினைகளும் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. அ.தி.மு.க. ஆட்சி மீண்டும் அமைந்தால், இவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அதேபோல், குடும்பங்களுக்கு நிதியுதவி, குடும்பத் தலைவிகளுக்கு மாதாந்திர உதவி, காஸ் சிலிண்டர் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. ரேஷன் கடைகளில் இலவச அரிசியுடன் பருப்பு மற்றும் எண்ணெய் வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்படும். கல்விக் கடன் தள்ளுபடி போன்ற திட்டங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

படைவீடு மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் நீர்ப்பற்றாக்குறை பிரச்சினையை தீர்க்க, பூலாம்பட்டியில் இருந்து ரூ.400 கோடி மதிப்பில் கூட்டுக்குடிநீர் திட்டம் கொண்டு வரப்பட்டது. மேலும் தார்சாலை, கான்கிரீட் சாலை, மேல்நிலைத் தொட்டி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டன.

இத்திட்டங்கள் தொடரவும், புதிய நலத்திட்டங்கள் அமல்படுத்தப்படவும், இரட்டை இலை சின்னத்திற்கு வாக்களித்து என்னை வெற்றி பெறச் செய்ய வேண்டும்,” என்றார்.

பிரசாரத்தில் பள்ளிபாளையம் ஒன்றியச் செயலாளர்கள் சேர்மன் செந்தில், வி.கே. குமரேசன், பள்ளிபாளையம் நகர செயலாளர் பி.எஸ்.வெள்ளிங்கிரி, பள்ளிபாளையம் பேரவை செயலாளர் டி.கே.சுப்பிரமணி, நாமக்கல் மாவட்ட கலைப்பிரிவு செயலாளர் ஆனங்கூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சிங்காரவேலு, மாவட்ட நெசவாளர் அணி செயலாளர் எம்.சிவக்குமார், படைவீடு பேரூர் கழகச் செயலாளர் ஜெகநாதன், பள்ளிபாளையம் ஒன்றிய துணைச்செயலாளர்கள் திருமூர்த்தி, முனிராஜ், மாவட்ட எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் முகிலன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப பிரிவு துணைத் தலைவர் சரவணன், அ.தி.மு.க. ஒன்றிய, பேரூர், கிளை செயலாளர்கள், சார்பு அணிகளை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், பாரதீய ஜனதா, பாட்டாளி மக்கள் கட்சி உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர். மேலும், ஆனங்கூர் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், உள்ளூர் நிர்வாகிகள் அவருக்கு பாராட்டு தெரிவித்து வாழ்த்தினர்.



திருப்பூர் வடக்கு தொகுதிக்கு உட்பட்ட சிறுபூலுவபட்டி பகுதி 12வது வார்டில் தேசிய ஜனநாயக கூட்டணியின் அதிமுக வேட்பாளர் எம்.எஸ்.எம்.ஆனந்தன் எம்எல்ஏ இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். அப்போது அப்பகுதியைச் சேர்ந்த பெண்கள் அவருக்கு ஆராத்தி எடுத்து வரவேற்றனர். அவருடன் திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதி எம்.எல்.ஏ., கே.என். விஜயகுமார், பகுதி, ஒன்றிய, சார்பு அணி, வார்டு, கிளை செயலாளர், நிர்வாகிகள் உடனிருந்தனர்.

Edited, Printed and Published by R. Muthu Kumar at N- 1, Sidco Industrial Estate, Kurichi, Coimbatore 641 021 and printed at "Newsmen Associates Private Ltd" press at Door No. N-1 Sidco Industrial Estate, Kurichi, Coimbatore 641 021 on behalf of M/s. Newsmen Associates Private Limited. RNI No. 24383/1973. நிர்வாகம், விளம்பரம் 0422/2675329 இமெயில்: cbenews@makkalkural.net, cbeadvt@makkalkural.net, நிறுவன ஆசிரியர்: எம். சண்முகவேல். Subject to Madras Court Jurisdiction.